# பாட்டாளி சிந்தனை

Volume 24 No. 2

October 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


# முசாபர் நகரில் நடந்த இரத்தம் தோய்ந்த வகுப்புவாதக் கலவரமும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பங்கும்

உத்திரப்பிரதேச மாநிலத்தின் முசாபர்நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மூன்று மாவட்டங்களில் ஆகஸ்ட் 27ம் நாளிலில் வெடித்துக்கிளம்பி பத்து நாட்கள் வரையில் நீடித்த வகுப்புவாத வன்முறைத் தீ 50க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்டதாக அரசாங்க அறிக்கை தெரிவிக்கிறது. பெரும்பாலும், சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த 50,000க்கும் மேற்பட்ட மக்கள் அவர்களின் வீடுகளிலிருந்தும் வாழிடங்களிலிருந்தும் விரட்டியடிக்கப் பட்டிருக்கிறார்கள். ஏராளமானவர்கள் கொடுங் காயமடைந்திருக்கிறார்கள். சமாஜ்வாதி கட்சி தலைமையிலான மாநில அரசாங்கம் இந்த கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாக பெருமையடித்தாலும் கலவரத்தால் ஏற்பட்ட காயங்களின், ரணங்களின் தழும்புகள் மறைந்துவிடவில்லை, வெகு வேகமாக அதிகரித்துவரும் பெரும்பான்மை அடித்தட்டு வெகுஜனங்களின் துன்பம், வறுமை, சீரழிவு, ஏழ்மை, நிராதரவான நிலை மற்றும் ஏழ்மைப் பட்ட இல்லாதவர்கள் சிந்தும் இரத்தத்தைக் கொண்டு தங்களது எதிர்கால அதிகாரம் மற்றும் ஆதாயத்திற்காக காய்நகர்த்தும் வாக்கு வியாபாரிகளால் அந்தத் தழும்புகள் அப்படியே ஆறாது நிலைத்திருக்கும்படி செய்யப்படுகின்றன. ஒரு திட்டமிடப்பட்ட சதி என்பது இல்லாமல் ஒரு ஏதேச்சையான பெண்களை கேலி செய்யும் சம்பவமோ அல்லது ஒரு மோட்டார் பைக் விபத்தினால் ஏற்பட்ட கைகலப்போ இத்தகைய பெரிய அளவு வகுப்புவாத வன்முறைத் தீயை தூண்டி விடமுடியாது என்பதைப் புரிந்து கொள்வதற்கு அதிக புத்திசாலித்தனம் ஒன்றும் தேவையில்லை. இதுவரையில் ஊடகங்களில் என்னவெல்லாம் தகவல்கள் உண்மைகள் வெளிவந்தனவோ அவற்றை ஒருவர் ஊடுருவி கவனமாகக் கவனிப்பாரெனில் பிரதான வகுப்புவாத சக்திகளின் நன்கு மூடிமறைத்துச் செய்யப்பட்ட சூழ்ச்சி மற்றும் தெளிவான திட்டமிடல் இது என்பது மிகத் தெளிவாகத் தெரியவரும்.

### வகுப்புவாத வன்முறை வெறியாட்டம்

இந்த சகோரத்துவ இரத்தக்கறைபடிந்த வன்முறை வெறியாட்டம் எதனால் நிகழ்ந்தது? முசாபர் நகரின் கவால் கிராமத்தின் மதச் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த இளைஞனால் ஒரு பெரும்பான்மை ஜாட் சமூகத்தைச் சேர்ந்த பெண் கேலி செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது. இதற்குப் பழிவாங்கும் விதமாக மதச்சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் பாதிக்கப்பட்ட பெண்ணின் இரண்டு சகோதரர்களால் ஆகஸ்ட் 27ம் நாள் கொல்லப்பட்டார். ஆனால் கொல்லப்பட்ட இளைஞன், மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞன்தான் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. மேலும் பாதிக்கப்பட்ட பெண் தான் கவால் கிராமத்திற்குச் சென்றதில்லையென்றும், அங்கு தன் சகோதரர்களால் கொலை செய்யப்பட்ட இளைஞனை தனக்குத் தெரியாதென்றும் சொல்லியிருப்பதாகக் கூறப்படுகிறது. அதன்பின்பு நடந்த சம்பவத்திற்கு பலிதீர்க்கும் விதமாக மதச்சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த கும்பல் இரண்டு கொலை புரிந்த இரண்டு சகோதரர்களை கொலை செய்தார்கள். இவைதான் வகுப்புவாத வன்முறைத் தீ மிகத் தீவிரத்துடன் பற்றிப்பரவ பின்னணியாக இருந்த சம்பவங்களாக அமைந்திருக்கின்றன. ஆனால் வகுப்புவாத வேட்டைக்காக ஊளையிட்டு அலையும் ஓநாய்களைக் கொண்டு வகுப்புவாத வன்முறை வெறியாட்டத்தையும் பதற்றத்தை அதிகரிப்பதற்கான தெளிவான அறிகுறிகள் இருந்தும், மேலும் ஏற்கனவே செப்டம்பர் முதல்வாரத்தில் அந்தப் பகுதியில் 451 குழு மோதல் சம்பவங்கள் நடந்தும் கூட, தனது நவீன திறன் கொண்ட உளவுத்துறையிலிருந்து தொடர்ந்து நடந்த சம்பவங்கள் குறித்து அன்றாடம் செய்திகளை அறிந்தும் கூட அரசாங்கம் ஏன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது என்பது குறித்து ஒருவர் வியப்படையலாம். மேலும் வெறியூட்டப்பட்ட சமூகவிரோதிகள் களத்தில் இறங்கி செயல்பட்டபோது மத்தியிலும் மாநிலத்திலும் இருந்த அரசாங்கங்கள் தங்களின் போலீஸ் மற்றும் துணை இராணுவப்படையினரைக் கொண்டு உறுதியாக சூழ்நிலையை எதிர்கொள்வதற்குப் பதிலாக இத்தகைய கொலைத் தாண்டவத்தையும், தீ வைப்பு நடவடிக்கைகளையும் மோதல்களையும் மௌனமாக வேடிக்கை பார்த்தார்கள். இம்மாதிரியான வன்முறைவெறியாட்டங்களை கட்டுக்குள் கொண்டு வந்து குற்றவாளிகளை சிறைப்பிடிக்க நன்கு திறன் பெற்ற நவீன வசதிகள் கொண்ட நிர்வாக இயந்திரத்திற்கு ஒரு மணி நேர அவகாசம் மட்டுமே தேவைப்படும் நிலையில், அரசாங்கத்தின் இந்த உள்நோக்கம் கொண்ட செயலின்மை மற்றும் இரக்கமற்ற மனோபாவம் ஆகியவை வன்முறை வெறியாட்டங்களை அனுமதிக்கும் மற்றும் தொடர்ந்து பரவச் செய்யும் மறைமுக உள்நோக்கத்தினை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி சுட்டிக்காண்பிக்கிறது. ஒருவர் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தையும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக

தொடர்ச்சி 5ம் பக்கம்

# சிறிய மாநிலங்களுக்காக ஏனிந்த கூக்குரல்?

மத்தியிலாளும் காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு.கூட்டணி அரசாங்கம் ஆந்திரப்பிரதேச மாநிலத்தை இரண்டாகப் பிரிப்பதாக அறிவித்ததுதான் தாமதம், ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆசியும் அருளும் பெற்ற குறுகிய பிராந்திய நலனும் வெறியும் கொண்ட பிரிவினைவாத சக்திகள் நாடு முழுவதும் தனி மாநில பிரிவினை கோரிக்கைகளை எழுப்பத் துவங்கிவிட்டன.

இச்சக்திகளின் தூண்டுதலால் மேற்கு வங்கத்தின் வடகிழக்கு மற்றும் டார்ஜிலிங் பகுதிகளில் தனியாக கோர்க்காலாந்து, போடோலாந்து, கர்பி அன்லாங், கரோலாந்து, கம்தாபுரி மாநிலங்கள் கோரியும் மஹாராஷ்ட்ராவை பிரித்து விதர்பா மாநிலம் அமைக்கக்கோரியும் உத்தரப்பிரதேசத்தை பிரித்து ஆவாத்பிரதேசம் பூர்வாஞ்சல் பண்டேல்கந்த் ஹரித்பிரதேசம் ஆகிய மாநிலங்களை பிரிக்க வேண்டும் என்றும் அஸ்ஸாம் மற்றும் நாகாலாந்து மாநிலங்களில் திமஸா இனமக்கள் வாழுகின்ற பகுதிகளை ஒன்றிணைத்து திமராஜி அல்லது திமாலாந்து மாநிலம் அமைக்கக்கோரியும் மணிப்புரை பிளந்து புதிதாக குகிலாந்து அமைக்கவேண்டும் என்றும் நாடெங்கிலும் பிரிவினைக்குரல்கள் ஓங்கி ஒலிக்கத்துவங்கியுள்ளன.

இந்திய ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் மிகுந்த நம்பிக்கைக்குரிய பிரதிநிதியான காங்கிரஸ் கட்சியானது வரவிருக்கும் நாடாளுமன்றத்தேர்தலில் ஆதாயம் அடையும் எண்ணத்தோடு மட்டுமே இந்த நேரத்தில் தனித்தெலுங்கானா அறிவிப்பை வேண்டுமென்றே வெளியிட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகால தங்களது ஆட்சியில் மக்களின் வாழ்க்கை நிலைமை அதலபாதாளத்தில் விழுந்துவிட்டதாலும் எங்கும் ஊடுருவிவிட்ட லஞ்சமும் அதிகரித்து வரும் பெரு ஊழல் புகார்களும் வருகின்ற தேர்தலில் தங்களுக்கு வெற்றி வாய்ப்பு மங்கிவிட்டதை காங்கிரஸ் கட்சி நன்கறிந்துள்ளது. எனவே தேர்தல் அரசியலில் கூட்டல் கழித்தல் கணக்கை மாற்றிப்போட்டுப்பார்க்க முயல்கின்றது. இந்த எண்ணத்தோடு மாநிலங்களைத் துண்டாக்குதல் என்ற துருப்புச்சீட்டைப்போட்டு அரசியல் களத்தில் தலைதூக்க விரும்புகின்ற பல்வேறு பிரிவினை சக்திகள் மற்றும் குறுகிய பிராந்தியவாத அமைப்புகளை தன்பக்கம் இழுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே பணத்தாசையையும் அதிகாரபோதையையும் ஊட்டவேண்டிய அவசியத்தில் உள்ளது. அவர்களின் உடனடி இலக்கு ஆந்திரப்பிரதேசம். ஆந்திரத்தை தேர்ந்தெடுத்ததற்கு காரணம் கடந்த நாடாளுமன்றத்தேர்தலில் அதிகப்படியான காங்கிரஸ் எம்.பி.க்களை தேர்ந்தெடுத்து அனுப்பிய அம்மாநில காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு ஜெகன்மோகன் ரெட்டி தனிக்கட்சி ஆரம்பித்ததாலும் பல்வேறு பிரிவினைவாத மோதல்களாலும் கட்சிக்குள் அதிருப்தி அதிகரிப்பதாலும் தெலுங்கானா ஆதரவு குழுக்கள் பலம்பெற்று வருவதாலும் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி பலவீனமடைந்து வருவதால் இழந்த பலத்தை மீண்டும் பெற வேண்டும் என்ற பேராசையில் பிரிவினைவாத சக்திகளை தன்பக்கம் இழுத்துக்கொள்ளும் எண்ணத்தோடு தனித்தெலுங்கானா அறிவிப்பை காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இவ்வாறு மாநிலங்களைப்பிரிப்பதென்பது மக்களின் ஒற்றுமையை குலைக்கும் முதலாளித்துவ நயவஞ்சகத்திற்கு உகந்ததாக இருப்பதால் இவ்வாறு மாநிலங்களை துண்டாடுவதற்கு ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவும் கிட்டுகிறது. வாக்கு வங்கி அரசியல் நடத்தும் முதலாளித்துவ அரசியல்வாதிகள் மற்றும் சந்தர்ப்பவாதிகள் நடத்தும் வெறிபிடித்த அதிகார சூதாட்டத்தில் ஒடுக்கப்படும் மக்கள் வெறும் பகடைக்காய்களாக பயன்படுத்தும் முதலாளித்துவ கபடநாடகம்தான் மாநிலங்களை துண்டாடுவதாகும்.

### சுரண்டல் முதலாளித்துவ அமைப்புமுறையை பாதுகாப்பதற்கான வஞ்சகத்திட்டம்

பெரிய மாநிலங்களுக்குள் இருக்கும் உட்பிராந்தியங்கள் புறக்கணிக்கப்படுவதால் அப்பிராந்தியங்களுக்கு தனி மாநில அந்தஸ்து கோருவதை அரசியல் கட்சிகள் நியாயப்படுத்துகின்றன. பெரிய கட்சி சிறிய கட்சி என்ற பாகுபாடு இன்றி தேசிய பிராந்திய கட்சிகள் அனைத்தும் இதில் அடங்கும். இப்போதெல்லாம் கல்வியாளர்கள் அரசியல் சட்ட நிபுணர்கள் பொருளாதார நிபுணர்கள் அரசியல் விமர்சகர்கள் ஆகியோரும் அரசியல் கட்சிகளோடு சேர்ந்துகொண்டு பாண்டித்யமான வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடுகிறார்கள். இத்தகைய விவாதங்கள் வாயிலாக உண்மையை மறைக்கப்பார்க்கிறார்கள்.

துன்பப்படும் மக்களின் துயர துடைப்பது ஒரு புறம் இருக்கட்டும் மாநிலங்கள் பிரிக்கப்படுவதால் அவர்களது துன்பங்கள் இம்மிகூட குறையாது. மாறாக இத்துன்பங்கள் அதிகரிக்கவே செய்யும். ஏனெனில், அவர்களது துன்பத்திற்கு காரணம் சுரண்டல் முதலாளித்துவ அமைப்புமுறையாகும். இவ்வுண்மையை அரசியல் கட்சிகளோ இந்த அறிவு ஜீவிகளோ விண்டுரைப்பதில்லை. மாறாக மிகக் கவனமாக மூடி மறைக்கிறார்கள். குறுகிய பிராந்திய உணர்வுகளை தூண்டிவிடுவது மட்டுமின்றி பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை காணப்படுவது தான் இத்தகைய தனி மாநில கோரிக்கைகள் வலுப்பெறுவதற்கு காரணம் என இத்தகைய வாதங்கள்

தொடர்ச்சி 2ம் பக்கம்

**தனிமாநில பிரிவினை...**

# மாநிலங்களைப் பிரிப்பது வாழ்வின் எரியும் பிரச்சினைகளை தீவிரப்படுத்துகிறதேயொழிய எந்தத் தீர்வையும் தருவதில்லை

1ம் பக்கம் தொடர்ச்சி

மூலம் இவர்கள் நிலைநிறுத்தப்பார்க்கிறார்கள். இந்த பண்டிதர்களை என்னென்று சொல்வது?

ஈவிரக்கமின்றி சுரண்டுகின்ற முதலாளித்துவத்தில் ஜாதி மதம் இனம் மொழி பிராந்தியம் மாநிலம் என்ற எந்தப் பாகுபாடும் இன்றி பாடுபடும் மக்களின் அனைத்துப்பிரிவினரும் ஒடுக்கப்பட்டு நசுக்கப்படுகிறார்கள் என்பது புத்தியுள்ள மனிதர் அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். ஒரு மாநிலத்தை எத்தனை கூறுகளாக துண்டுபோட்டாலும் சுரண்டல் முதலாளித்துவ அமைப்புமுறை அவ்வாறாகவே நிலைத்திருக்கும். அதன் கட்டுக்கோப்பு குலையாது. எனவே மாநிலத்திற்குள் ஒரு பகுதி புறக்கணிக்கப்படுகிறது, பாரபட்சம் காட்டப்படுகிறது, மறுக்கப்படுகிறது, ஒதுக்கப்படுகிறது, ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது, சமமற்ற வளர்ச்சி, பின்தங்கிய நிலை ஆகியவற்றை காரணம் காட்டி தனிமாநில கோரிக்கையை விலைபேசும் இந்த வியாபாரிகள் சமநிலையற்ற பொருளாதார வளர்ச்சி, பின்தங்கிய பகுதிகளை புறக்கணித்தல், மிகக்கோரமான ஏற்றத்தாழ்வுகள், இடையறாது மக்களின் வறுமை அதிகரிப்பது, பாரபட்சமான பொருளாதார அமைவுமுறையின் இதர பிறழ்வுகள் அனைத்தும் சுரண்டல் முதலாளித்துவ அமைப்புமுறையின் தவிர்க்க இயலாத விளைவுகளே என்ற உண்மையை மிக சூசகமாக மூடிமறைக்கிறார்கள். இந்த முதலாளித்துவ அமைப்புமுறைக்குள்ளேயே மேற்கொள்கின்ற கட்டமைப்பு மாற்றங்கள் எவையும் அமைப்புமுறையை மாற்றியமைக்காது. எனவே மேற்கூறிய பாரபட்சங்களும் அடிப்படை வசதிகள் புறக்கணிக்கப்படுவதும் ஒதுக்கப்படுவதும் தொடர்வது மட்டுமின்றி அவை அதிகரிக்கவும் செய்யும். இது ஒருபுறமிருக்க மறுபுறத்தில் தனிமாநில கோரிக்கையை எழுப்புவது ஒரு மாநிலத்திற்குள் வாழும் மக்களில் ஒரு பகுதியினர் மற்றொரு பகுதியினருக்கு எதிராக திரும்புவதும் அல்லலுறும் மக்களின் ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினருக்கு எதிராக திருப்பிவிடுவதும் அவர்களுக்கிடையே சகோதர உணரவை குலைப்பதும் உழைக்கும் மக்களிடையே ஒருமித்த நலன் உள்ளது என்ற உணர்வு வளர்வதை தடுக்கிறது.

### விழிப்புணர்வுள்ள மக்களால் தனிமாநில கோரிக்கையை ஏன் ஆதரிக்க முடியாது

கடுமையான யதார்த்தம் இவ்வாறாக இருக்கையில் காங்கிரசோ பா.ஜ.க.வோ பிற பிராந்திய கட்சிகளோ ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைத்தால்கூட மக்களிடையே பிரிவினைவாத குறுகிய பிராந்தியவாத வெறியுணர்வை எவ்வாறு மூட்டிவிட முடிகிறது? பிரிவினைவாத மனப்பாங்கை அவர்களிடையே வளர்த்துவிடுவதன் மூலம் தங்குதடையற்ற வளர்ச்சிக்கான அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நசித்துவிட்டு தனிமாநில கோரிக்கை என்ற கவர்ச்சிகரமான கோஷத்தால் மக்களை முட்டாளாக்க அவர்களால் எவ்வாறு முடிகிறது? நற்சிந்தனையுடைய விழிப்புணர்வு மிக்க மக்கள் இந்த அடிப்படை அம்சத்தை தெளிவாக புரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். அப்போதுதான் ஒற்றுமையை குலைக்கக்கூடிய அபாயகரமான பிரிவினைவாத வெறித்தனத்தை அவர்களால் எதிர்த்து முறியடிக்க முடியும்.

வாழ்வின் மீதும் வாழ்வாதாரத்தின் மீதும் தொடர்ந்து தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு எதிரான கோபமும் ஆவேசமும் அவ்வப்போது பொங்கியெழுவது இயற்கையே. கிளர்ச்சியின் பாதையில் செல்லும்படி வாழ்க்கை அவர்களை நிர்ப்பந்திக்கிறது. இங்கே பிரதானமான கேள்வியாதெனில் நியாயமான கோபத்தின் வெளிப்பாடாகிய மக்களின் எதிர்ப்பலை தனது தர்க்கரீதியான இலக்கை அடைவதற்கு எந்த பாதையில் செல்லவேண்டும் என்பதாகும். மேலே கூறியவாறு அனைத்துவிதமான பிரச்சினைகள் பிறழ்வுகள் ஒதுக்கப்பட்டு மறுக்கப்பட்டு பாரபட்சத்திற்குட்படுத்தப்படுவதால் ஏற்படும் துன்பங்கள் போன்றவற்றை தோற்றுவித்து வளர்த்துவிடுகின்ற ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி சக்திவாய்ந்த ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்களை கட்டியெழுப்புவதில்தான் அடங்கியுள்ளது. இத்தகைய இயக்கம் ஒடுக்கப்படும் மக்களின் எஃகுறுதியான ஒற்றுமையிலிருந்துதான் தனது பலத்தை பெற இயலும். ஒடுக்கப்படும் மக்கள் எந்த பிராந்தியத்தை சேர்ந்தவராயினும் எந்த மொழி பேசுவோராயினும் எந்த மதத்தை பின்பற்றுபவராயினும் எந்த இனத்தில் தோன்றியவராயினும் இவ்வேறுபாடுகளையெல்லாம் கடந்து ஒன்றுபடும்போதுதான் இத்தகைய எஃகுறுதியான ஒற்றுமை அவர்களுக்கிடையே நிலவும். குறைந்தபட்ச நிவாரணங்களையும் கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்குக்கூட நீடித்து நிலைத்த பெரிய அளவிலான ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுப்பதைத்தவிர வேறு வழியில்லை.

இத்தகைய மக்கள் இயக்கங்கள்தான் சுரண்டப்படும் புறக்கணிக்கப்படும் ஒதுக்கப்படும் மக்களை ஒன்றிணைத்து சுரண்டும் முதலாளிகளோடு நேருக்கு நேர் மோதச்செய்யும். இத்தகைய இயக்கங்களை உயர்ந்த கலாச்சாரம் மற்றும் ஒழுக்கநெறிகளின் அடிப்படையில் சரியான புரட்சிகர தலைமையின் கீழ் வளர்த்தெடுக்கும்போது அனைத்து துன்ப துயரங்களுக்கும் கேடுகளுக்கும் அடிப்படை காரணமான ஒடுக்கும் முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கான புரட்சிகர போராட்டத்திற்கு அவை இட்டுச்செல்லும்.

இதை நினைத்துத்தான் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் அஞ்சி நடுங்குகிறார்கள். இவ்வாறு புரட்சிகர போராட்டங்கள் வளர்வதற்கு காரணமாயமைந்த உழைக்கும் மக்களின் ஒற்றுமை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை முறியடிப்பதற்கு அவர்கள் பல்வேறு கட்டுக்கதைகளை புனைகிறார்கள். திசை திருப்பும் உத்தியை கையாண்டு மக்கள் கவனத்தை தவறான வேறுபக்கத்திற்கு திருப்பிவிடுகிறார்கள். தனிமாநில கோரிக்கையை முன்வைத்து புத்திசாலித்தனமாக திட்டமிட்டு அணி திரட்டப்பட்ட இயக்கம் இத்தகைய வஞ்சக சதியின் பங்கும் பகுதியுமேயாகும். ஆளும் வர்க்கத்தின் நலனோடு தம்மை பிணைத்துக்கொண்டு அவ்வர்க்கத்தால் கண்ணும் கருத்துமாக வளர்த்தெடுக்கப்படும் அனைத்து கட்சிகளும் இந்த வஞ்சகசதியில் இணைந்துள்ளன. அதிகரித்துவரும் மக்கள் எதிர்ப்பை தவறான வழியில் திசைதிருப்பி அதன்மூலம் அவர்களை விரக்தியுறச் செய்வது மட்டுமின்றி ஊட்டிவிடப்படும் பிரிவினைவாத மதவாத பிராந்தியவாத குறுகியவாத வெறித்தனம் என்ற நஞ்சானது உழைக்கும் மக்களிடையே ஆட்சியாளர்கள் விரும்புகின்றவாறு பிளவுகளை உருவாக்கி இதன்மூலம் ஆட்சியாளர்களும் ஆளுங்கட்சியினரும் வெற்றிபெறுகின்றனர். உழைக்கும் மக்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் சந்தேகப்படுவதும் நம்பாதிருப்பதும் அவர்களை சகோதரச் சண்டையில் ஈடுபடுத்தி ரத்தவெள்ளம் பெருக்கெடுக்கச்செய்வதிலும் சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம்கூட அவர்களிடையே மோதல்கள் உருவாகுமாறு தூண்டிவிடுவதிலும் ஆட்சியாளர்கள் வெற்றிபெறுகின்றனர். இவ்வாறு மக்களிடையே செயற்கையாக தூண்டப்பட்ட வேற்றுமையின் பலத்தில் தனது சுரண்டல் வர்க்க ஆட்சியை தொடர்ந்து நீட்டித்து வைப்பதற்கு மிகக் கவனத்துடன் யுக்தி வகுத்து நடைமுறைப்படுத்துகிறார்கள். போலி மார்க்சிஸ்ட் கட்சிகளான சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) கட்சிகள் மக்கள் நலனை புறக்கணித்ததால் மக்கள் ஒற்றுமையை குலைக்கும் இந்த வஞ்சக சதி வேலையை ஆளும் வர்க்கம் வெற்றிகரமாக நடத்துவதற்கான பலம் கிடைத்தது. ஜனநாயக வெகுஜன இயக்கப்பாதையிலிருந்து அவர்கள் விலகியபோதே அவர்கள் தரித்திருந்த மார்க்சிசம் என்ற முகமூடி கழன்றுவிட்டது. நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் போராட்ட இயக்கங்களில் ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதல் நடத்தி பதவியையும் அதிகாரத்தையும் தக்க வைத்துக்கொள்வதற்காக ஆளும்வர்க்கத்தின் கட்டளைக்கு அடிபணிந்து மக்கள் இயக்கங்களை அவர்கள் ஒடுக்கியபோது மிச்சமீதியிருந்த சாயமும் வெளுத்துவிட்டது. போராட்ட இயக்கப்பாதையை முற்றிலுமாக கைவிட்டுவிட்டு தற்போது அவர்கள் ஒன்றிரண்டு தொகுதிகளுக்காக தேசிய அல்லது பிராந்தியக்கட்சிகளுக்கு வால்பிடிப்பது மட்டுமின்றி பிரிவினைவாத பிராந்தியவாத கட்சிகளோடுகூட கூட்டணி வைத்து தேர்தல் களத்தில் ஆதாயம் தேடுகின்ற சந்தர்ப்பவாத அரசியல் மட்டுமே அவர்களுக்கு இன்று பிரதான அரசியலாகிவிட்ட நிலையில் அவர்களை இடதுசாரிகள் என்று அழைப்பதுகூட சற்றும் பொருத்தமற்றது.

மக்களிடையே ஒற்றுமையை வளர்த்து கேடு தரும் பிரிவினைவாத எண்ணங்களை எதிர்த்துப் போரிட்டழிப்பதற்கு உகந்த கலாச்சார சூழலை உருவாக்கவல்ல சக்திவாய்ந்த ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் இல்லாமற்போனதால் பெரிய கட்சி சிறிய கட்சி என பாகுபாடின்றி அனைத்து முதலாளித்துவ கட்சிகளும் மக்கள் வாழ்வோடு சில்லுத்தவளையாட்டம் ஆடுகின்றன. முதலாளித்துவ கட்சிகளால் தூண்டிவிடப்பட்ட இந்த பிரிவினைவாத இயக்கத்துக்கு மாவோயிஸ்டுகள் உள்ளிட்ட நக்சல் அமைப்புகள் அனைத்தும் தகுதியற்ற முழுமையான ஆதரவளித்து அதன்மூலம் மக்கள் இயக்கங்களுக்கு ஊறு விளைவிக்கின்றன.

இந்த நல்ல சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக் கொண்டு ஆளும்வர்க்கம் தனது சேவகர்களின் உதவியோடு பிரிவினைவாத கோஷத்தை எழுப்புகிறது. பெரிய மாநிலங்களை கூறுபோட்டு சிறிய மாநிலங்களை உருவாக்குவதால் மக்கள் ஒற்றுமை பலவீனமடையும் என்றும் அதன் காரணமாக அவர்களால் சுரண்டல் முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக சக்திவாய்ந்த இயக்கங்களை வளர்த்தெடுக்க முடியாது என்றும் ஆளும்வர்க்கம் நன்கு அறிந்துள்ளது. இவ்வாறாக இயக்கத்தின் முதுகெலும்பே முறியடிக்கப்படுகிறது. ஆகவே முதலாளித்துவ அமைப்புமுறைக்குள் தனிமாநில கோரிக்கையை விழிப்புணர்வுள்ள மக்களால் எப்போதும் ஆதரிக்க முடியாது.

### அழுகுரலின் வேதனையை அதிகரிக்கின்றன தனிமாநிலங்கள்

இத்தகைய பின்னணியில் நடந்த சம்பவங்களையும் நிலைமையையும் ஒருவர் சீர்தூக்கிப் பார்ப்பாராயின் பெரிய மாநிலங்களை கூறுபோட்டு இதுவரையில் உருவாக்கப்பட்ட சிறிய மாநிலங்களில் மக்களின் வேதனையும் அபலநிலையும் குறையாதது மட்டுமின்றி அதிகரித்துள்ளன என்ற நிதர்சனத்தை பார்க்கமுடியும்.

உதாரணத்திற்கு **1960**களில் ஒன்றுபட்ட அஸ்ஸாம் மாநிலத்தை பிரித்து படுமோசமாக பின்தங்கிய நிலையிலிருந்த பூர்வீகக்குடிகள் மற்றும் சில பின்தங்கிய இன மக்களின் வாழ்க்கை வளம் கொழித்து அப்பகுதிகள் பெருவளர்ச்சி அடையும் என்று காரணங்கள் கூறி நாகாலாந்து, மேகாலயா, மிசோரம் ஆகிய மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அவர்கள் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்பட்டதா? அல்லது பிற மாநிலங்களின் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்வைப்போலவே புதிதாக உருவாக்கப்பட்ட இம்மாநில மக்களின் வாழ்க்கை நிலைமைகளும் நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டே போனதா? இந்தியாவில் வறுமை குறைந்துகொண்டே வருகிறது என்று எப்படியாவது நிரூபிக்கவேண்டுமென்று எல்லாவிதமான தந்திரங்களையும் உபயோகிக்கின்ற இந்தியத் திட்டக்கமிஷன்கூட அஸ்ஸாம், மேகாலயா, மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து மாநிலங்களில் மிகவேகமாக வறுமை அதிகரித்திருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது. எந்த இனத்து மக்களின் பின்தங்கிய நிலையையும் ஒதுக்கப்படுவதையும் சாக்குகாட்டி தனிமாநில கோரிக்கையை முன்வைத்து அதில் வெற்றியும்பெற்ற அரசியல் தலைவர்கள் தனிமாநிலம் கிடைத்தபிறகு இவர்களைப்பற்றி சற்றேனும் கவலைகொண்டார்களா அல்லது அவர்களது அபலை நிலையை பயன்படுத்திக்கொண்டு தங்களது செல்வத்தை பெருக்கிக்கொள்வதில் மும்முரம் காட்டினார்களா?

**2000**ம் ஆண்டில் உத்தரப்பிரதேசம் பீஹார் மத்தியப்பிரதேச மாநிலங்களிலிருந்து முறையே உத்தரகாண்ட், ஜார்க்கண்ட், சட்டிஸ்கர் மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. இம்மாநிலங்களின் பின்தங்கிய ஏழை பூர்வீகக்குடிகளுக்கு வளர்ச்சி செழுமை என்ற ஆசைகாட்டி புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டதால் இல்லாமையாலும் அதிகரித்துவரும் ஏழ்மையாலும் கடுமையான பின்தங்கிய நிலையாலும் பீடிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் எந்தவிதமான மாற்றமும் நிகழவில்லை. பெரும்பாலான மக்கள் அஞ்சும் அளவிற்கு வறுமையிலும் துயரத்திலும் வாழ்கிறார்கள். வாக்குவங்கி அரசியல் நடத்தும் சுயநலமிக்க தலைவர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் அலட்சியப்போக்கை கண்டு வாளாவிருக்கிறார்கள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## ஏஐடிஎஸ்ஓ நடத்திய 8வது அகில இந்திய மாணவர் மாநாடு

# மக்கள் விரோத கல்விக் கொள்கைகளை எதிர்க்கவும் நீண்ட நெடிய போராட்ட இயக்கம் கட்டவும் அறைகூவல்

அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) 8வது அகில இந்திய மாணவர் மாநாட்டை கடந்த ஆகஸ்ட் 26 முதல் 29 வரை மத்தியப் பிரதேசத்தின் தலைநகரான போபாலில் நடத்தியது. இந்தியாவின் 26 மாநிலங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கில் திரண்டு வந்து ஆகஸ்ட் 26 அன்று நடைபெற்ற பேரணியில் மாணவர்கள் பங்கேற்றதால் போபால் ஒரு சிறிய இந்தியாவாக மாறியது.

பல்வேறு மொழிகளில் விண்ணதிர கோஷங்களை முழங்கிக் கொண்டும் பதாகைகளை தாங்கிக் கொண்டும் மாணவர்கள் அணிவகுத்து பேரணியில் வந்தனர். மாணவர் நடத்திய அப்பேரணி மிகுந்த கட்டுக்கோப்புடனும் தீர்மானத்துடனும் அர்ப்பணிப்புடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டது. தம்மை கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக்கொள்ளும் சி.பி.ஐ. மற்றும் சி.பி.ஐ.(எம்) உள்ளிட்ட கட்சிகளின் அரசியலால் இது போன்ற பேரணிகளை மறந்து வந்த போபால் மக்கள் “புரட்சி நீடூழி வாழ்க” என்ற சரித்திரப் புகழ் வாய்ந்த கோஷத்தை மீண்டும் கேட்டனர். ஏ.ஐ.டி.எஸ்.ஓ. ஊழியர்கள் பல மாதங்களாக செய்துவந்த பிரச்சாரம் எவ்வாறு ஒரு பிரம்மாண்டமான நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது என்பதையும் கல்வி மீதான தாக்குதல்களை எதிர்க்க உறுதி பூணவிருக்கிறது என்பதையும் தமது மிகுந்த ஆர்வத்துடன் மக்கள் கண்ணுற்றனர்.

‘சந்திரசேகர் ஆசாத் மைதானத்தில்’ (தசரா மைதானம், டி.டி. நகர்) நடக்கவிருந்த திறந்தவெளிக்கூட்டத்தில் பங்கேற்க ஆகஸ்ட் 26 பகல் 12 மணிக்கு நன்கு அலங்கரிக்கப்பட்ட அந்தப் பேரணி துவங்கிற்று. மாநாட்டை அறிவிக்கும் பேனரைப் பின்தொடர்ந்து ஏ.ஐ.டி.எஸ்.ஓ.வின் 8 செங்கொடிகளை உயர்த்திப்பிடித்து ஏ.ஐ.டி.எஸ்.ஓ.வின் 8 செயல்வீரர்கள் அணிவகுத்து வந்தனர். இதற்குப்பின் ஏ.ஐ.டி.எஸ்.ஓ.வின் தலைவர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து 4 வரிசைகளில் பல நூற்றுக்கணக்கான மாணவிகளும் மாணவர்களும் தத்தமது மாநில பேனர்களையும் கோரிக்கைப் பதாகைகளையும் தாங்கிக்கொண்டு சென்றனர். பேரழிவிற்குஉள்ளான உத்தரகாண்டில் மீட்பு நிவாரண மருத்துவ முகாம்களில் பங்கேற்றுவிட்டு அங்கிருந்து நேரடியாக மாநாட்டில் பங்கேற்க மாணவர்கள் வந்திருந்தனர். மேற்கு வங்கத்திலிருந்து பார்வையற்ற மாணவர்களும் தில்லியிலிருந்து சக்கர நாற்காலியில் ஒரு மாணவரும் புரட்சிகர உத்வேகத்துடன் பங்கேற்க வந்திருந்தனர்.

இதற்கு முந்தைய மாநாடுகளின் அனுபவங்களைப் போலவே போபால் மாநாட்டுத் தயாரிப்பும் பல தடைகளை எதிர்நோக்கியது. இம்மாநாட்டிற்கு சாதாரண மாணவர்கள் மற்றும் மக்கள் தரும் ஆதரவைக் கண்டு அஞ்சிய பா.ஜ.க. அரசாங்கமும் அதன் வழிகாட்டியான பா.ஜ.க.– ஆர்.எஸ்.எஸ். தலைமை இதனை சீரழிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டனர். பேரணிக்கு அனுமதி கொடுத்த பின்னரும் கூட இப்பேரணியை தவிர்க்குமாறு ஏ.ஐ.டி.எஸ்.ஓ. தலைமையை நிர்ப்பந்திக்கும் வகையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இம்மாநாட்டில் பங்கெடுத்திடாவண்ணம் அவர்களை உள்ளடக்கிய அரசு நிகழ்ச்சிகளை அறிவித்தனர். முதலில் அனுமதி தந்த பேரணி வழித்தடத்தை மாற்றி ஊருக்கு வெளியே ஒரு நீண்ட வழித்தடத்தை கொடுத்தனர். இருப்பினும் அன்று நடைபெற்ற பிரம்மாண்ட பேரணி நகர மக்ளை பெரிதும் கவர்ந்தது.

அன்று முன் தினம் பெய்த கனமழை மைதானத்தின் தரையை ஈரமாக்கி சகதியாக்கியது. இருப்பினும் உத்வேகம் குறையவில்லை. ஏ.ஐ.டி.எஸ்.ஓ. நாடு முழுவதும் நடத்திய மாணவர் இயக்கங்களின் புகைப்படக் கண்காட்சியும் உலகின் மாபெரும் மனிதர்களின் மேற்கோள் கண்காட்சியும் மைதானத்தில் வைக்கப்பட்டிருந்தது. மாணவர்களை பெரிதும் கவர்ந்தது. மத்தியப் பிரதேச உயர்நீதி மன்றத்தின் நீதிபதி ஆர்.டி. சுக்லா இக்கண்காட்சியை துவக்கி வைத்தார். அவர் தனது துவக்க உரையில் கல்வி மீதும் மனித சமுதாயத்தின் மீதும் நடந்துவரும் தாக்குதலுக்கு எதிராக மாணவர்கள் பொங்கி எழுவர் என்று தாம் உறுதியாக நம்புவதாகக் கூறினார்.

### திறந்தவெளி மாநாடு

திறந்தவெளி மாநாட்டு மேடையின் முகப்பில் மாபெரும் தியாகி சந்திரசேகர் ஆசாத்தின் உருவப் படம் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. அவர் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் ஆற்றிய




**ஆகஸ்ட் 26, 2013 அன்று மத்திய பிரதேசம் மாநிலத்தின் தலைநகரான போபாலில் நடைபெற்ற அகில இந்திய மாணவர் மாநாட்டின் பேரணி**

பங்கு மற்றும் போபாலில் இருந்துகொண்டு ஆற்றிய பல அருப்பெரும் நடவடிக்கைகளை நினைவு கூர்ந்து மாநாட்டு மைதானத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டிருந்தது.

திறந்தவெளிக் கூட்டத்திற்கு ஏ.ஐ.டி.எஸ்.ஓ.வின் அகில இந்திய தலைவர் தோழர் ஸ்ரீராம் தலைமை தாங்கினார். மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் மாநகரத்தில் அமைந்துள்ள தேவி அகில்லா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.ஏ. அப்பாஸி, தில்லி பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் அனில் சட்கோபால் இம்மாநாட்டின் சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்தனர்.

பேராசிரியர் அப்பாஸி தனது உரையில், எங்கும் பரவிவரும் சீரழிவைக் கண்டு தான் வேதனையுற்று குழம்பிப் போயிருந்ததாகவும் அவ்வேளையில் மாநாட்டிற்காக பிரச்சாரம் செய்துவந்த ஏ.ஐ.டி.எஸ்.ஓ. செயல்வீரர்களை சந்திக்க நேர்ந்ததென்றும் கூறினார். இது ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றை ஏற்படுத்தியது என்று கூறினார். நமது நாட்டை பீடித்து உலுக்கிவரும் ஆழமாகிவரும் நெருக்கடியை நேரடியாக எதிர்கொண்டு அதனை முறியடிக்கவல்ல மாணவர்களும் மாணவிகளும் இன்னும் நமது நாட்டில் இருக்கிறார்கள் எனவும், அவர்கள் சீரழிவின் கறைகளை அகற்ற எழுந்து நிற்பார்கள் எனவும் தனக்கு மீண்டும் நம்பிக்கை கிடைத்திருப்பதாகக் கூறினார்.

இதற்குப்பின் உரையாற்றிய பேராசிரியர் அனில் சட்கோபால் போபால் விஷவாயு துயரச் சம்பவ நிகழ்வுக்குப்பின் நடந்த மக்கள் இயக்கத்தை நினைவு கூர்ந்த அவர் அதன் போக்கில் சிறையில் இருந்த ஏ.ஐ.டி.எஸ்.ஓ. ஊழியர்களுடன் தமக்கு ஏற்பட்ட தொடர்பை பற்றி பேசினார். மத்தியில் ஆட்சி செய்யும் யு.பி.ஏ. அரசாங்கமும் அதற்கு முந்தைய என்.டி.ஏ. அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்காக கல்வியை எவ்வாறு தனியார்மயம் வியாபாரமயம் ஆக்கி வருகின்றனர் என்பதையும் ஏழை மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பை எவ்வாறு மறுத்து வருகின்றனர் என்பதையும் எடுத்துக் காட்டினார். கல்வி மீதான தாக்குதலுக்கு எதிராக மேற்கத்திய நாடுகளில் மாணவர்கள் எவ்வாறு தீரமிக்க எதிர்ப்பியக்கத்தை நடத்தி வருகின்றனர் என்பதை விளக்கினார்.

மாநாட்டு வரவேற்புக் கமிட்டியின் துணைத் தலைவர் வழக்குரைஞர் அனில் திரிவேதி மாநாட்டு நினைவுப் பரிசை வெளியிட்டார்.

ஏ.ஐ.டி.எஸ்.ஓ.வின் பொதுச் செயலாளர் தோழர் சௌரவ் முகர்ஜி தனது உரையில், ஒரு வாரமாகப் பெய்துவரும் பருவ மழையை பொருட்படுத்தாது, மாநில அரசாங்கத்தின் எதிர்ப்புகளை பொருட்படுத்தாது ஆயிரக்கணக்கான மாணவர்கள் போபாலில் அணி திரண்டிருப்பதாகக் கூறினார்.

1 முதல் 8ம் வகுப்பு வரை பாஸ்–பெயில் முறையை மீண்டும் அமல்படுத்தக் கோரியும், இரு, பருவ / முப்பருவ (Semester / trimester) முறையை நீங்கக் கோரியும், மாணவர்கள் ஆசிரியர்களின் ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்களை எதிர்த்தும், பெண்கள் மீதான கொடுமைகளை எதிர்த்தும் இயக்கங்களைக் கட்ட மாணவர்கள் போபாலில் ஒன்று திரண்டிருப்பதாக அவர் கூறினார். இம்மாநாட்டுச் செய்தியினை மாணவர்கள் மத்தியில் எடுத்துச் செல்லுமாறும் நீண்ட நெடிய போராட்ட இயக்கத்தை கட்ட முன்வருமாறும் அவர் அறைகூவல் விடுத்தார்.

எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலீட் பீரோ உறுப்பினரும் எஸ்.யு.சி.ஐ. (ஸ்டூடன்டஸ் பீரோ)வுடன் தொடர்பு கொண்டவரும் ஏ.ஐ.டி. எஸ்.ஓ.வின் நிறுவன உறுப்பினர்களுள் ஒருவருமான தோழர் ரஞ்சித் தர் தனது உரையில், இம்மாணவர் சங்கம் துவங்கப்பட்ட பொழுது மிகவும் சிறியதாகவும் பெரிய எண்ணிக்கையில் உறுப்பினர்களும் எவ்வித அங்கீகாரமும் இல்லாமலும் இருந்ததாகக் கூறினார். பெரிய மாணவர் சங்கங்களான ஏ.ஐ.எஸ்.எஃப், ஸ்டூடன்டஸ் பிளாக், பிரதேஷ் ஸ்டூடன்ட்ஸ் யூனியன் உள்ளிட்ட பெரிய மாணவர் சங்கங்களுடனான கூட்டுக் கூட்டங்களில் தனது உரிமைக்காக அது போராட வேண்டியதிருக்கும். அதன் ஆரம்ப நாட்களில் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் பெரும் அன்பு, அக்கறை, பாசம் மற்றும் மிக உயர்ந்த கலாச்சார நீதிநெறி மதிப்புகளே தோழர் ரஞ்சித் தார் போன்ற மாணவர்கள் இவ்வமைப்பை நோக்கி ஈர்க்கப்பட காரணமாயிருந்தது.

எஸ்யுசிஐ(சி)யின் பொலீட்பீரோ உறுப்பினரும் ஏஐடிஎஸ்ஓவின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவருமான தோழர் அசித் பட்டாச்சார்யா அவர்கள் ஏஐடிஎஸ்ஓவின் இணையதளத்தை துவக்கி வைத்தார். ஏஐடிஎஸ்ஓ துவக்கப்பட்ட நாள் முதற்கொண்டே மாணவர் இயக்கத்தை நடத்தியது என அவர் தனது உரையில் கூறினார். 1950களில் கல்வியறிவு பெற்ற வேலையில்லாதோரின் எண்ணிக்கையை குறைக்கும் பொருட்டு மத்திய அரசாங்கம் கல்வியை கட்டுப்படுத்தியபோது, முழு தீர்மானத்தோடு போர்குணமிக்க இயக்கத்தை துவக்கியது ஏஐடிஎஸ்ஓவாகும். இன்று கல்வி தாக்கப்படுகிறது. தனியார்மயமாக்கப்படுகிறது மற்றும் வியாபார

தொடர்ச்சி 4ம் பக்கம்

# 8வது அகில இந்திய மாணவர் மாநாடு...

3ம் பக்கம் தொடர்ச்சி



ஆகஸ்ட் 29, 2013இல் பிரதிநிதிகள் கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் சிறப்புரையாற்றுகிறார்

மயமாக்கப்படுகிறது. நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 70%த்தினர் நாளொன்றுக்கு ரூ.20/– மேல் செலவழிக்க முடியாமல் இருக்கும்போது கட்டுக்கடங்காத கல்விக்கட்டண உயர்வுகளால் ஏழைக் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களுக் கான கல்வி வாய்ப்பானது முழுவதும் அழிக்கப்பட்டு விடும். இவ்வெறுக்கத்தக்க சதியை அனைத்து வழி களிலும் எதிர்த்திடுமாறு ஏஐடிஎஸ்ஓ.வின் செயல்வீரர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலீட் பீரோ உறுப்பினரும் ஏஐடிஎஸ்ஓவின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவருமான தோழர் கிருஷ்ண சக்ரவர்த்தி அவர்கள் இத்திறந்தவெளி கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். தோழர் சக்ரவர்த்தி தனது உரையில் முதலாளித்துவத்தின் ஒட்டுமொத்த தாக்குதலின் ஒரு பகுதியே கல்வி மீதான தாக்குதலு மாகும். அனைத்து காலங்களிலும் அறிவின் முன்னேற்றத்தை தடுக்கவும் உண்மையை மறைக்கவும் ஆளும் வர்க்கம் முயற்சித்திருக்கிறது. இன்று, சிந்தனையை படைமுறைப்படுத்தவும் (Regimentation) இவ்வாறாக சமுதாயத்தில் பாசிச சூழ் நிலையை உருவாக்கவும் முயற்சித்து வருகிறது. பாசிசம் வளர்ந்து விட்டால் விரல் விட்டு எண்ண விடக் கூடியவர்களே மனிதர்களாக இருப்பார்கள். ஏனென்றால் மனிதத்துவம் வளரும் போக்கையே பாசிசம் தடுக்கிறது என்றார். இதனால்தான் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் மதச்சார்பற்ற ஜனநாயகபூர்வ விஞ்ஞானபூர்வ கல்வியை எதிர்க் கின்றனர். நமது நாட்டில், தம்மை கம்யூனிஸ்ட் கட்சிகள் என்று அழைத்துக் கொள்ளும் கட்சிகள் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் அரசாங்க அதிகார பீடத்திற்கு வந்துவிட்டால் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கே சேவை புரி கின்றனர். ஆதலால் அவற்றுக்குள் எவ்வித பாகு பாடு இல்லாமல் அனைத்து கட்சிகளும் இவ்வாறு தான் செயல்படுகின்றன. எனவே அவை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் கல்விக் கொள்கைகள் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் திட்டத்திற்கு ஏற்படவே இருக்கின்றன.

இன்று ஏ.ஐ.டி.எஸ்.ஓ. நாடு முழுவதும் பரவி யிருப்பதானது தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் சிந்தனைகள் மற்றும் படிப்பினைகளால் தானாகும். மாணவர்கள் இளைஞர்களின் பங்கேற்பு இல்லாமல் புரட்சி சாத்தியமில்லை எனவும் புரட்சிகர அரசியலின் ஆன்மா உயர்ந்த மதிப்புகள், நீதிநெறி கலாச்சாரத்தில் தான் உள்ளது என்றும் அவர் கூறினார். எனவே இத்தருணத்தின் தேவைக்கு ஏற்றவாறு தம்மை உயர்த்திக்கொண்டு உயர்ந்த கலாச்சாரத் தரத்தை பெறுமாறு மாணவர்களுக்கு அவர் அறைகூவல் விடுத்தார்.

மேலும் தோழர் கிருஷ்ண சக்ரவர்த்தி மாணவர் களுக்கு விடுத்த உத்வேகமுள்ள அழைப்பில் : "அனைத்து மக்கள் விரோத கொள்கைகளையும் எதிர்த்து போராடும் மாபெரும் பாரம்பரியத்தை அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கப் பிரதிநிதிகளான நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்" என்று கூறினார். இன்றும் கூட கல்விக்கு எதிரான சதித் திட்டத்தை முறியடிக்க தீர்மானகரமான தொடர்ச்சி யான போராட்டத்தை நடத்துவீர்கள்" எனத் தான் நம்புவதாகக் கூறினார்.

### பிரதிநிதிகள் அமர்வு

மாநாட்டின் பிரதிநிதிகள் அமர்வானது சாஹித் பகத்சிங் மஞ்ச்சில் (ரயில்வே கம்யூனிட்டி ஹால், போபால்) நடைபெற்றது. ஆகஸ்ட் 27 காலை தோழர் எம்.என். ஸ்ரீராம் ஏஐடிஎஸ்ஓவின் கொடியை ஏற்றி வைத்தபிறகு, அகில இந்திய தலைவர்கள் தியாகிகள் ஸ்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினர். 2 ஆயிரத் திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் அவ்விடத்தில் திரண்டிருந்தனர், பின்பு முக்கிய வரைவு தீர்மானம் மற்றும் ஸ்தாபன அறிக்கையின் மீதான விவாதத்தில் மாணவர்கள் பங்கேற்றனர்.

பெண்கள் மீதான வன்முறை, சிரியா மீதான ஏகாதிபத்திய தாக்குதல் மிரட்டல், மூட நம்பிக்கைக் கெதிரான செயல்வீரரும் பகுத்தறிவுவாதியுமான டாக்டர். நரேந்திர தபோல்கர் காட்டுமிராண்டித் தனமாக படுகொலை மற்றும் தியாகிகள் பட்டியலில் பகத்சிங் பெயரை சேர்க்காத மத்திய அரசாங்கத்தின் முடிவை கண்டித்தது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிய 36 உறுப்பினர்களைக் கொண்ட வலிமை யான அகில இந்திய நிர்வாகக் கமிட்டியையும் 77 உறுப்பினர்களைக் கொண்ட அகில இந்திய கவுன் சிலையும் தோழர் கமால்சென் அவர்களை தலை வராகவும் தோழர் அசோக் மிஸ்ரா அவர்களை பொதுச் செயலாளராகவும் இம்மாநாடு தேர்ந் தெடுத்தது.

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலீட்பீரோ உறுப்பினர் தோழர் கிருஷ்ண சக்ரவர்த்தி அவர் களும் இப்பிரதிநிதிகள் அமர்விலும் உரையாற்றி னார். எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்)யின் மத்திய கமிட்டி உறுப்பினரும் ஏஐடிஎஸ்ஓவின் முன்னாள் பொதுச் செயலாளருமான தோழர் சாயா முகர்ஜி அவர்களும் போபாலின் மூத்த பத்திரிகையாளர் ஸ்ரீ எச்.எல் ஹார்டென்யா, குஜராத்தின் நன்கறியப்பட்ட மனித உரிமை கமிட்டியின் துணை தலைவரான ஸ்ரீ அஸிவால் ஆகியோரும் பிரதிநிதிகள் மாநாட்டில் உரையாற்றினர்.

1970களில் ஏஐடிஎஸ்ஓவின் பொது செயலாள ராக இருந்த தோழர் சாயா முகர்ஜி உரையாற்று கையில் : மேற்கு வங்கத்தில் என்னுடைய பள்ளி நாட்களிலிருந்தே ஏஐடிஎஸ்ஓவுடன் என்னை இணைத்துகொண்டு வந்திருக்கிறேன். அப்போது மாணவர்களின் இயக்கமானது பிரதானமாக ஒரு இடதுசாரி தன்மை வாய்ந்ததாக இருந்தது. அப்போது ஏஐடிஎஸ்ஓ போதிய வலிமையில்லாதிருந்த போதிலும் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் மேன்மை பொருந்திய சிந்தனைகள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் எங்களால் பல மாணவர்களை ஈர்க்கவும் பல கல்லூரிகளில் மாணவர் சங்கங்களை அமைக்கவும் முடிந்தது. மாணவர்களின் இயக்கம், கல்லூரி தேர்தல்கள் எனும் பெயரில் ரௌடியிஸமும் ஆள்பலமும், வாக்குகளை அடிப்படையாகக் கொண்ட முக்கிய அரசியல் கட்சிகளின் துணை கொண்டு கொடூர பலத்தால் பீதியை பரப்புவதும் யூனியன்களை கைப்பற்றுவதும்தான் தற்பொழுது நடக்கிறது. கூடவே, கல்வியை அதன் சாராம்சத்திலிருந்து பிரித்தெடுப்பது மட்டுமின்றி, கல்விபெறும் வாய்ப்பை தடைசெய்வது, வியாபாரமயம் – தனியார்மய மாக்குவது ஆபாசத்தை தொடர்ந்து பரப்புவது, வக்கிரம், பாலியல் வக்கிரம் மற்றும் பிழைப்புவாதம் போன்றவற்றின் மூலம் மாணவர்களின் தார்மீக முதுகெலும்பை ஒடித்து, பெருமைமிக்க குதிராம், பகத்சிங், சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் பிற பெருமைக்குரிய மாமனிதர்களின் மரபை துண்டிப் பதன் மூலம் போராடும் சக்தியை மாணவர்களை இழக்கச்செய்ய ஆளும் முதலாளிவர்க்கம் தொடர்ந்து முயற்சிக்கிறது. அதிகரிக்கும் குற்றம், வன்முறை, பெண்கள் மீதான அராஜகம், மூத்தோர்கள் மீது மரியாதையின்மை மற்றும் அதுபோன்ற சமூக, கலாச்சார தார்மீகக் கேடுகளுக்கு ஒரு அரணாக விளங்கும் உண்மையான விஞ்ஞானபூர்வ, ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற கல்வியை கோரி உயர்ந்த கலாச்சார, தார்மீகத்தின் அடிப்படையில் அமைந்த புதிய போர்குணமிக்க மாணவர்களின் இயக்கத்தை நடத்த வேண்டியது ஏஐடிஎஸ்ஓவின் கடமையாகும்.

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளரும் ஏஐடிஎஸ்ஓவின் ஸ்தாபக உறுப்பினர் களில் ஒருவருமான தோழர் பிரவாஸ் கோஷ் இப்பிரதிநிதிகள் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில், சீரழிந்த அழுகிவரும் முதலாளித்துவம் கல்வியதன் சாராம்சத்தை அழித்து அதனை பெரும் வியாபாரமாக மாற்றி விட்டது என்றார். எனவே முதலாளித்துவம் உள்ள வரை வாழ்வின் எந்த அடிப்படை பிரச்சினையும் தீராது என்றார். எனவே மார்க்சிசம்–லெனினிசம்– தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையை உயர்த்திப் பிடித்து முதலாளித்துவத்தை எதிர்த்து போராட ஆயிரக்கணக்கான குதிராம் போஸ்கள், பகத்சிங்குகள் சந்திரசேகர் ஆசாத்துக்கள், அஸ்ஃபகுல்லாக்கள், பிரித்திலதாக்கள் இந்தியாவிற்கு தேவைப்படுகிறது என்றார். விடுதலை இயக்கத்திலும் ஜனநாயக வெகுஜன இயக்கத்திலும் தங்கள் இன்னுயிரை ஈந்தவர்கள் குறித்து ஒரு இரங்கல் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கல்வியின் மீதான தாக்குதல்களை எதிர்க்க உறுதியான தீர்மானத்துடன் இம்மாநாடு இனிதே நிறைவுற்றது.



ஆகஸ்ட் 29, 2013இல் போபாலில் நடைபெற்ற 8வது அகில இந்திய மாணவர் மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகள் கூட்டத்தில் ஒரு பகுதியினர்

## முசாபர்நகரில்...

# மதக்கலவரம் அரசியல் இலாபத்திற்காக திட்டமிட்டு நடத்தப்படுகிறது

1ம் பக்கம் தொடர்ச்சி

அதன் தொடர்ச்சியினை ஆய்வு செய்து தொடர்புபடுத்திப் பார்ப்பாரெனில் இந்த வகுப்புவாத வன்முறை வெறியாட்டம் தன்னெழுச்சியாக நிகழ்ந்த சம்பவமல்ல மாறாக மீண்டும் அதிகாரத்திற்கு வரத்துடிக்கும் பேராசையின் காரணமாக பிரதான இந்து வகுப்புவாத சங்கப் பரிவாரம் மற்றும் அதன் அரசியல் முன்னணியான பி.ஜே.பியினால் மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்ட ஒன்றாகும் என்பது மிகத்தெளிவாகப் புலப்படும். அதே நேரத்தில், உ.பி.யில் அதிகாரத்திலிருக்கும் சமாஜ்வாதி கட்சி, மத்தியில் அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ், மற்றும் உ.பியின் அதிகாரத்திலிருக்கும் சமாஜ்வாதிக் கட்சிக்கு எதிராளியான மாயாவதியின் பகுஜன் சமாஜ்கட்சி, மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணியோடு அதிகாரத்தில் பங்குவகிக்கும் ரஷ்டிரிய லேக்தள் கட்சி இவையனைத்தும் இந்த வகுப்புவாத வன்முறைத் தீ பரவ மறைமுகமாகத் துணைசெய்திருக்கிறார்கள். சற்றே தொடர்ச்சியாக நடந்த சம்பவங்களை ஆராய்ந்து பார்ப்போம். அது நிச்சயமாக நாம் மேற்சொன்ன விஷயங்களுக்குத் தெளிவான சாட்சியங்களாக அமையும்.

ஜாட் சமூகத்தைச் சேர்ந்த பெண் கேலி கிண்டலுக்கு ஆளானதாக வதந்தி மிகத் தீவிரமாகப் பரவியவுடன், சங்கப்பரிவாரங்கள் ‘லவ் ஜிகாத்’ (முஸ்லீம் இளைஞர்களால் இந்து சமயப் பெண்கள் கடத்தப்படுவது அல்லது வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுவது) என்பதை முன்னிலைப்படுத்தி கோபமூட்டும் பிரச்சாரத்தினை கட்டவிழ்த்துவிட்டார்கள். ஆகஸ்ட் 27ம் தேதியன்று அந்த வட்டார காவல் நிலையங்களில் நடந்த கொலை சம்பவங்களுக்கு எதிராகப் பதியப்பட்ட இரண்டு முதல் தகவல் அறிக்கையில் பாலியல் வன்குற்றம் நடந்ததாகவோ அல்லது ஈவ் டீசிங் செய்யப்பட்டதாகவோ எந்த தகவலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. நடந்த சண்டை மற்றும் கொலைகளுக்கு உடனடிக் காரணமாக மோட்டார் வாகன விபத்து சம்பவம் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் கூட, இந்துத்துவ பட்டாளம் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் ‘லவ் ஜிகாத்’ என்ற பிரச்சினையை முன்னிலைக்குக் கொண்டு வந்தது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதுமட்டுமல்ல சங்கீத் சாம் என்ற மீரட் பகுதி பி.ஜே.பி சட்டமன்ற உறுப்பினர், இரண்டு வாலிபர்கள் ஒரு கும்பலால் மிகக் கொடூரமாகத் தக்கப்படும் ஒரு வீடியோ காட்சியை யூ டியூப்பில் சுற்றுக்கு விட்டிருந்ததுடன் அந்த வீடியோ காட்சியில் பாதிப்பிற்குள்ளான இளைஞர்கள் ஈவ் டீசிங் வன்முறைக்கு ஆளான ஜாட்சமூகத்தைச் சேர்ந்த பெண்ணின் சகோதரர்கள்தான் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்த வீடியோ பதிவு இரண்டு வருடங்களுக்கு முந்தயது என்றும் பாகிஸ்தானில் சியோல் கோட்டில் பதிவு செய்யப்பட்டது என்றும் பின்பு கண்டறியப்பட்டது.

அதிகரித்துவரும் பதற்றத்தை மேலும் உச்சத்திற்குக் கொண்டுசெல்ல ஜாட் சமூகத்தவர்களின் இரட்சகர்கள் என்று தங்களை சுயபிரகடனம் செய்து கொண்ட சங்கபரிவாரத்தின் ஆதரவு பெற்றவர்கள் ஆகஸ்ட் 31ம் தேதியன்று ஜான்சத்தில் ‘பஞ்சாயத்’ ஒன்றை அணிதிரட்டி இரண்டு ஜாட் சமூக இளைஞர்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமானவர்கள் மீது உரிய செயல்நடவடிக்கைகளைக் கோரினர். ஆனால் அதில் இதற்கு முன்பு முஸ்லீம் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த இளைஞன் கொல்லப்பட்டது குறித்து அவர்கள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. மேலும் செப்டம்பர் 7ல் நாகலா மான்டூரிலும் அதனைச் சுற்றிய பகுதிகளிலும் உள்ளவர்களை அணிதிரட்டி ‘மகா பஞ்சாயத்’ நடத்தி மேலும் வகுப்புவாத வன்முறை வெறியாட்டத்தைக் கட்டவிழ்ப்பதாக பிரகடனமும் செய்தார்கள். ஆனால் இவை எல்லாவற்றிற்குப் பிறகும் கூட சாமாஜ்வாதி கட்சியின் அரசாங்கம் இந்த மகாபஞ்சாயத்துக்கான அழைப்பு விடுத்ததன் பின்னணியில் இருக்கின்ற உள்நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு மிக அதீதமான திறமையும் அல்லது முன்யூகத் திறனும் அவசியம் என்பதுபோல பாவனை செய்து கொண்டு வெறுமனே வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்தது. இந்த ‘மெகாபஞ்சாயத்’ ‘பாஹுபச்சாவோ, பேட்டி பச்சாவோ’ சம்மேளனம் (மகளையும் மனைவியையும் பாதுகாப்போம் மாநாடு) என்ற பொதுக்கூட்டத்தில் பி.ஜே.பி சட்டமன்ற உறுப்பினர் சுரேஷ் ரானா, சங்கீத் சாம், குன்வார்பர்தேந்தர் சிங், முன்னாள் லோக்தள எம்.பி. ஹரேந்தர் சிங் மாலிக், முன்னாள் பி.ஜே.பி எம்.பி., சோஹன்வீர் சிங் மற்றும் சங்கப் பரிவாரத்தின் சதாவி பிராச்சி ஆகியோர்கள் ஜாட் சமூகத்தைச்சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்டது என்பது இந்து சமாஜத்தின் மீதான தாக்குதல் என்று காட்டுவதற்காக தங்களது பேச்சாற்றலால் தூண்டிவிடும் திறமை அனைத்தையும் வெளிக்காட்டினார்கள், அவ்வாறு தூண்டிவிடும் பேச்சானது எப்படிப்பட்ட பின்விளைவுகளைக் கொண்டுவரும் என்பதை அறிந்தே அவர்கள் இதைச் செய்தனர். அவ்வாறாகவே இந்தக் கூட்டம் முடிவுற்றதுமே வன்முறை மோதல்கள் வெடித்தெழுந்தன. துப்பாக்கிகளோடும் நவீன ஆயுதங்களோடும் கும்பல் கடும் சினத்துடன் களமிறங்கி தாக்குதல் தொடுத்தன. மிக விரைவாக இந்த மோதல் அண்மைப் பகுதிகளுக்கும் பரவி ஆயிரக்கணக்கான அப்பாவி குடிமக்களை வன்முறையால் பலிகொண்டது, சொத்துகளை சூறையாடியது தீவைத்துக் கொளுத்தியது. ஒருபுறத்தில் இது சங்கப்பரிவாரத்தின் சதித்திட்டமாக இருக்க, மறுபுறத்தில் அப்பகுதி பி.எஸ்.பி எம்.எல்.ஏ.வும் மற்றும் காங்கிரஸ் தலைவர்களும் ஆகஸ்ட் 30ம் தேதி முசாபர்நகர், மீனாட்சி சௌக்கில் நடந்த ஒரு நமாஸ் (பிரார்த்தனைக்) கூட்டத்தை பொதுக்கூட்டமாக மாற்றி பாதிக்கப்பட்ட மதச் சிறுபான்மை சமூகத்தவர்களின் நலன்களை பாதுகாப்பதாகவும், உயர்த்திப்பிடிப்பதாகவும் பாவனை செய்தனர் இது, ஏற்கனவே திரண்டுநின்ற பதற்றம் மேலும் அதன் உச்சபட்சக் கொதிநிலையை எட்ட அனுமதித்தது. மேலும் மிக அலட்சியமாக சமாஜ்வாதி கட்சி அரசாங்கம், கடந்த 12 மாதங்களில் 50க்கும் மேற்பட்ட வகுப்புவாத மோதல்கள் முசாபர்நகரில் நடந்திருப்பதை அறிந்திருந்தும், இந்தப் பதற்றம் மெல்ல மெல்ல உச்சத்திற்கு வந்து ஒரு சிறு பொறியில் வெடித்துவிடும் நிலையிலிருப்பதை அறிந்தும் கூட, அதனை தடுப்பதற்கோ அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கோ எவ்வித உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சாமாஜ்வாதிகட்சி அரசாங்கம் வேண்டுமென்றே செயலற்ற நிலையில் இருந்துவந்ததாக மக்களால் குற்றம் சாட்டப்பட்டது, அதன் உயர்மட்ட மந்திரி ஒருவர் இந்த வகுப்புக் கலவரத்தை தூண்டிவிட்டதாக குற்றம்சாட்டப்பட்டார்.

நடைபெற்ற சம்பவங்கள் ஒவ்வொன்றும் இவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடன் இருந்தன. ஆனால் எது காரணம் என்று நிரூபிக்கவியலாத வண்ணம் புதிராக இருந்ததுடன் பல்வேறுபட்ட பூர்ஷுவாக் கட்சிகளின் ஆதரவோடு விசிறிவிடப்பட்டு ஒரு மிகப்பெரும் வகுப்புவாதக் கலவரத் தீயாக அது வெடித்தெழுந்தது. அனைத்துக் கட்சிகளும் தங்களின் அப்பட்டமான வாக்கு சேகரிக்கும் பேராசையினால் இதில் ஒன்றுபட்டுநின்றனர். அதைப் போலவே அதிகாரத்தின் பல மட்டங்களிலிருந்த போலீஸ் துறையும் வெறிகொண்ட கும்பலைவிரட்ட தங்களின் சக்தியைப் பயன்படுத்தாது வெறுமனே வன்முறை அதிகரிப்பதை வேடிக்கைபார்த்து நின்றனர். அடுத்ததாக, ஒருவருக்கொருவர் குறை கூறிக் கொள்ளும் போட்டி ஆரம்பம்! இந்த பிரதான வகுப்புவாத வன்முறை சக்திகள் யாரெல்லாம் இந்த வன்முறை மற்றும் கொலைத் தாண்டவத்தை தூண்டித் தூபமிட்டார்களோ அவர்கள் அனைவரும் மக்களின் வெறுப்பிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதிலும் மற்றும் குற்றவாளிகள் பிடிபட்டுவிடாமல் தப்புவதற்கு வழிகண்டுபிடிப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டனர். குற்றச் செயல்களில் ஈடுபட்ட அனைவரும் தாங்கள் எதற்கும் பொறுப்பல்ல என்றும் தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் கூறிக்கொண்டு ‘யார் இதனை முதலில் துவக்கியது’ என்று ஒருவொருக்கொருவர் எதிர் கேள்வி எழுப்பி அதே தொனியில் காவல்துறையின் பாரபட்சமான நடைமுறையையும், அதீத நடைமுறையையும் குறைசொல்லி, மிகவும் அருவருக்கத்தக்க அரசியல் விளையாட்டை விளையாடத் துவங்கினர். முடிவில், சம்பிரதாயமாக ஒரு சில காவல்துறை அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்கினார்கள். மேலும் உயர்மட்ட அரசியல் நிர்வாகத்திலிருந்தவர்களைத் தொடாமல் வழக்கமாக சில அரசியல் தலைவர்களை அவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர்கள் என்பது தெரிந்தே கண் துடைப்பாகக் கைது செய்தார்கள். அவர்கள் செய்த கொடுங்குற்றத்திற்காக ‘கௌரவமாக’ குற்றம் சுமத்தப்பட்டு ‘ஹீரோ’க்களாக்கப்பட்டார்கள். இதனை நாம் மட்டும் கூறவில்லை, மாறாக அநேக பத்திரிகையாளர்களும் நற்சிந்தனை கொண்ட ஒரு பகுதி மக்களும் கூட இதனை தெரிவித்திருக்கிறார்கள். அறியப்பட்ட ஒரு பத்திரிகையாளர் ஒருவர் மிகச் சரியாக எந்த வகுப்புவாத அமைப்பு பிற சமூகத்தவர்மீதான துவேஷத்தைப் பரப்பும் கலையில் திறனோடும் மிக நைச்சியமாக வதந்தியின் மூலமும் எவ்வாறு பரப்பியது என்றும், என்னென்ன மாதிரியான பொய்களும், சாடைப்பேச்சுகளும் பிறரை மிகவும் கோபமூட்டும் என்பதைத் தெரிந்து, அவற்றை பரப்பி எவ்வாறு ஒரு கலவரத்தை உற்பத்தி செய்வதில் அவர்கள் ஈடுபட்டனர் என்றும் அவர்கள் எவ்வாறு மிக நேர்த்தியாக இந்த வகுப்புவாத வன்முறையை வரிசைக்கிரமமாகத் ஒன்றுக்குபின் ஒன்றாகத் திட்டமிட்டு அரசு நிர்வாகத்தின் துணையுடன் அரங்கேற்றியிருக்கிறார்கள் என்றும் மிகச் சரியாக கவனித்து பதிவுசெய்திருக்கிறார்.

### மக்கள் இணக்கத்துடன் வாழவே விரும்புகின்றனர்

ஒரு விஷயம் இங்கே மிக வலியுறுத்திச் சொல்லப்பட வேண்டியது அவசியமாகும். நன்கறியப்பட்ட பூர்ஷுவாக் கட்சிகள் அவர்களின் உள்நோக்கம் கொண்ட தேர்தல் லாபத்திற்காக, வகுப்புவாத–சாதியவாத–இனவாத அடிப்படையில் மக்களை பிரித்தாள விரும்பியபோதிலும், வகுப்புவாத–சாதியவாத–இனவாத உணர்வுகளைக் கிளர்த்திவிட்டு பரஸ்பரம் வெறுப்பையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்த விழைந்தபோதிலும், பாடுபடும் வெகுஜனங்களில் பெரும்பான்மையினர் வெவ்வேறுபட்ட சாதி, மத, இன பாகுபாட்டு நிலையில் இருந்தபோதிலும், தங்களுக்குள் எந்தவித பரஸ்பர வெறுப்பும், அவநம்பிக்கையும் வளர்வதை விரும்புவதில்லை, இதுபோன்ற சகோதரச் சண்டைகளிலும் ஈடுபடுவதில்லை, ஒருபோதும் அவர்களிடையே இருந்துவரும் இணக்கமும் சகோதரத்துவ உணர்வும் சிறிதும் சீர்குலைக்கப்பட விரும்புவதில்லை. மாறாக கட்டவிழ்த்துவிடப்பட்ட வகுப்புவாதத் தீ பரவி அனைத்தையும் படுநாசமாக்க விழைகின்றபோது, ஒரு சமூகத்தைச் சார்ந்த மக்கள் பிறிதொரு சகோதர சமூகத்தைச் சார்ந்த மக்களை தங்களின் உயிரையும் கூட கொடுத்து காப்பற்றும் எண்ணற்ற சம்பவங்களை நாம் பல முறை கண்ணுற்றிருக்கிறோம். அகோரப்பசி கொண்ட வகுப்புவாத மிருகங்கள்தான் வறுமையுற்று நிராதரவான நிலையிலிருக்கும் அடித்தட்டு வெகுஜனங்களின் இரத்தத்திலும் சதையிலும் விருந்து சமைத்து தின்ண தேடி அலைகின்றன. இந்த வகுப்புவாத வெறியர்கள், அமைதியாக நல்லிணக்கத்துடன் வாழ்கின்ற அண்டை அயலார்களுக்கிடையில் ஒரு தீயவனைத் தேர்வுசெய்வதற்கும் அதே சமயத்தில், பரஸ்பரம் சந்தேகமும் அவநம்பிக்கையும் கொள்ளும் எண்ணப்போக்கை உச்சபட்சத்திற்கு வளர்த்து இனிமேல் அண்டை அயலார்களோடு சுமூகமாக வாழமுடியாது என்ற அச்சத்தை உருவாக்கவும் முயலுகிறார்கள். சில மாதங்களுக்கு முன் அசாமின் கோக்ரஜ்காரில் இதைத்தான் நாம் கண்டோம். தற்போது மீண்டும் முசாபர்நகரில் காண்கிறோம். இந்தப் பிரிவினைக் கலவரம் 50,000க்கும் மேற்பட்ட சிறுபான்மை சமூகத்தவர்களை இடம்பெயர்க்கும் அளவிற்கு உச்சத்தை எட்டிவிட்டது. நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்தவர்களும் கூட மீண்டும் தங்கள் முந்தைய இருப்பிடத்திற்குச் சென்றால் கொலைசெய்யப்படுவோம் தாக்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக திரும்பிச் செல்ல மறுக்கிறார்கள். மிகவும் ‘மனிதாபிமானம் கொண்ட மென்மையான’ அரசாங்கம் என்று தங்களைப் பறைசாற்றிக் கொண்டும், ஏழைகளுக்காக அல்லும் பகலும் உழைப்பதாகவும் கூறிக்கொண்டு ‘வளர்ச்சி’ என்ற வெற்று மேளத்தை முழக்கிக் கொண்டிருக்கும் அரசாங்கம் இந்த நிவாரணமுகாம்களில் தண்ணீர், சுகாதாரம் என்ற எந்த அடிப்படை வசதியையும் ஏற்படுத்தித்தராமல், ஏன் ஒருநாளைக்கு இரண்டு வேளை உணவுகூட வழங்காமல் விலங்கினும் கீழான நிலையில் மக்களை நடத்திவருகிறது. ஆனால், மக்கள் தாங்கள் திரும்பவும் இருப்பிடத்திற்குச் செல்வதால் ஏற்படப்போகும் கொடுமைக்குப் பயந்து இந்த பன்றிக் கூடாரங்களில் வாழ்வதே மேல் என்று தங்களைச் சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள். இதுதான் தங்களது தேர்தல் ஆதாயத்தைப் பாதுகாப்பதற்காக எதையும் செய்யத் துணியும் அதிகார வெறிபிடித்தலையும் ஓட்டுப் பறிக்கும் கட்சிகளின் மனிதத் தன்மையற்ற காட்டுமிராண்டித்தனத்தின் எல்லையாகும்.

### உ.பி யில் பூர்ஷுவாக் கட்சிகளின் அதிகாரப் போட்டிக்கான அரசியல்

மக்களின் வறுமை, ஏழ்மை, பரஸ்பரம் அவநம்பிக்கை, இணக்கமின்மை மற்றும் பிரிவினை இவையனைத்தையும் பயன்படுத்தி தங்களது அரசியல் எதிர்காலத்தை வளர்த்துக்கொள்ளும் அனைத்து

தொடர்ச்சி 6ம் பக்கம்

## முசாபர்நகரில்...

# மத்திய, மாநில அரசாங்கங்கள் கொலைவெறியாட்டம் தொடர அனுமதித்தன

5ம் பக்கம் தொடர்ச்சி

முன்னணி அரசியல் கட்சிகளின் மறைமுக ஆதரவோடு, வகுப்புவாத ஆர்.எஸ்.எஸ் பி.ஜே.பி.யால் திட்டமிடப்பட்ட வகையில் உருவாக்கப்பட்டதுதான் இந்த இரத்தம் பாயும் சகோதரத்துவ மோதல் என்ற உண்மை, பூர்ஷுவா மீடியாக்களால் கூட மூடி மறைக்கப்பட முடியவில்லை. அரசியல் முக்கியத்துவம் மிகுந்த உ.பி மாநிலத்தில் பி.ஜே.பி.யின் தேர்தல் வெற்றி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான பொறுப்பு கொலைகாரன் நரேந்திர மோடியின் வலதுகரமாகச் செயல்பட்ட முன்னமே கொடுமைகளுக்குப் பெயர்போன அமித்ஷா நியமிக்கப்பட்டிருக்கிறான் என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிய வருகிறது. இதன் மூலம் கொலைக்காரன் நரேந்திர மோடி பிரதமர் அரியாசனத்தில் ஏறிஅமர்வதற்கு வழிவகுக்கப்படுகிறது. அதற்கு வகுப்புவாதக் கலவரங்கள் வெடித்துக்கிளம்ப வேண்டியதும் மிக அவசியமான அவர்களின் நிகழ்ச்சிநிரலாக இருந்து வருகிறது. இன்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் விஷயம் என்னவெனில், சூழ்ச்சிக்குப் பெயர்போன சகுனியைப் போன்றவனும், இரக்கமற்ற கொடுங் குற்றவாளியும் 2002ல் ஆர்.எஸ்.எஸ் குருமார்கள் மற்றும் மோடியின் சார்பாக முஸ்லீம்களுக்கு எதிரான மிகமோசமான இனக்கலவரத்தை நடத்திக்காட்டியதுடன், ஒன்றுக்குப்பின் ஒன்றாக போலி என்கவுன்டர்களை நடத்திய அமித்ஷாவை கீழ் நீதிமன்றகளில் மட்டுமல்ல உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் வரை சென்று பிணை பெற்று இந்த அனைத்துக் கொடுமைகளை அரங்கேற்றுவதற்காக நெற்றியில் குங்குமம் மற்றும் சந்தனத் திலகமிட்டு அவரின் இந்துத்துவவெறி வாதத்தைப் மூர்க்கத்தனமாக பகட்டாரவாரம் செய்வதற்காக அழைத்துவந்திருப்பதுதான். இது எங்ஙனம் நடைபெறமுடிந்தது? ஏனெனில், ஆளும் வர்க்கத்தின் பின்புலம் கொண்ட, மக்களைக் கொல்வதற்கு உரிமம் பெற்று சட்டத்தின் துணையோடு உற்சாகத்துடன் விரல் உயர்த்தி சவால்விட்டு வலம் வரக்கூடிய பல முன்னுரிமைபெற்ற நபர்களில் இவரும் ஒருவர். அமித்ஷாவைப் போன்ற ஆர்.எஸ்.எஸ்–பி.ஜே.பி.யின் நம்பிக்கையைப் பெற்றவர்கள் அதிகாரத்தைப் பெறுவதற்கு ஒருவழிதான் இருக்கிறது, அது ஒன்றுக்குப் பின் ஒன்றாக வகுப்புவாத இரத்தக் கலவரங்களை திட்டமிட்டு நடத்தி வெகுஜனங்களிடையே வகுப்புவாதத் துருவமயப்படுத்தும் வேலையைச் செய்வதுதான். ஆகையால், ஆளும் வர்க்கத்திடமிருந்து ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி.க்கு சைகை கிடைத்ததுமே, அதாவது ஆளும் வர்க்கத்தின் மிகவும் நம்பகமான கட்சியான காங்கிரஸின் செல்வாக்கு சரிந்துவருவதால் வரவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலில் அதிகாரத்திற்கு வரக்கூடிய கட்சி என்ற வகையில் பி.ஜே.பி ஆளும் வர்க்கத்தின் ஆதரவை பெறக்கூடும் என்பதை உணர்ந்துகொண்டு நாடு முழுவதும் வகுப்புவாதப் பதற்றத்தால் வெறியூட்டி வருகிறது. முசாபர்நகர் சம்பம் அதன் துவக்கமாக அமைந்திருக்கிறது. இதில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது, இந்த ஆர்.எஸ்.எஸ் – பி.ஜே.பி.யின் சூழ்ச்சியை முறியடிக்க எந்த ஒரு கட்சியோ சக்தியோ எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பதுதான், ஏனெனில் ஒவ்வொரு கட்சியுமே குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கவே விரும்புகிறார்கள்.

மற்றொரு புறத்தில், வாக்கு வங்கியை உருவாக்கவும் அதனைத் தக்கவைக்கவும் நீண்டகாலமாக சிறுபான்மை இனத்தவர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் நலன் என்ற துருப்புச் சீட்டை பயன்படுத்தி வந்த முலாயம் சிங்கும் அவரின் சமாஜ்வாதி கட்சியும் சமூகங்களுக்கிடையே இருந்துவரும் வாக்கு சதவிகித எண்ணிக்கைக் கணக்குக்குள் சிக்கி வெளியில் வர முடியாமல் அதில் மூழ்கிப்போனது. ஆகவே, அனைவரும் இந்த வகுப்புவாதக் கலவரங்கள் வெடித்தெழுவதில் தங்களுக்கான அரசியல் லாபத்தின் பங்கை அறுவடை செய்ய விரும்புகிறார்கள். ஆகவே, ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி.யின் குண்டர்களால் அப்பகுதி வெறியூட்டப்பட்டு பதற்றம் ஏற்பட்டதுமே, முலாயம் சிங் தனது நம்பிக்கைக்குரிய மந்திரியான அசாம்கானை நியமித்து சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ரெளடிகளையும் சமூக விரோதிகளையும் தூண்டிவிட்டு எரியும் தீயில் எண்ணெய் வார்த்ததுடன், தனது நிர்வாக இயந்திரத்தையும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுப்பதிலிருந்து விலகியிருக்கச் செய்தார். அவருக்கு ஏற்கனவே சிறுபான்மை சமூகத்தவர்களிடையே வாக்கு வங்கி இருக்கும் அதே வேளையில், வகுப்புவாதத்தினால் வெறியூட்டப்பட்ட நிலையில் இருக்கின்ற அஜித்சிங்கின் ஆர்.எல்.டி மற்றும் பி.ஜே.பியின் பிடியில் இருக்கின்ற இந்து ஜாட் சமூகத்தவர்களின் ஒட்டுகளை கணிசமான அளவிற்கு தான் வசப்படுத்த முடியும் என்பதே முலாயம்சிங்கின் தேர்தல் கணக்காக இருந்தது. வகுப்புவாதக் கலவரத்தை அனுமதிப்பதன் மூலம் பி.ஜே.பி, ஆர்.எல்.டி, என்ற இரண்டு கட்சிகளையும் மற்றும் காங்கிரஸையும் கூட சற்றே தடுமாற வைத்துவிட முடியும் என்ற வகையில் அவர் இரட்டை ஆதாயம் தேட நினைத்தார். ஆகவே அவர் இக்கலவரம் தொடர அனுமதித்தார். ஆனால். குறிப்பாக சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த சமூகவிரோதிகளும் குற்றவாளிகளும் சக்திவாய்ந்த அரசு இயந்திரத்தினையும் அதற்கு நீண்டகாலமாக துணை செய்து வருபவர்களையும் எதிர்த்து நிற்க அவர்களால் முடியாததால் நினைத்தபடி அவை நடக்கவில்லை. ஆகவே சிறுபான்மை முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்களே இதில் அதிகம் பாதிக்கப்பட்டனர். இம்மாதிரியான ஒரு விளைவு ஏற்பட்டதற்கு அறியப்பட்ட முஸ்லீம் மதத் தலைவர்களும், மௌலவிகளும், ஒரு பகுதி முஸ்லீம் அடிப்படைவாதத் தலைவர்களும் மந்திரி அசாம்கான்தான் இதற்கெல்லாம் காரணம் என்று கைகாட்டுகிறார்கள். உதாரணத்திற்கு டெல்லி ஜும்மா மசூதியின் சையத் அஹமத் புகாரி குறிப்பிட்டதைச் சொல்லலாம் “முஸ்லீம்கள் அகமத்கானை வெறுக்கிறார்கள் ஏனெனில் முசாபர் நகர் வன்முறைக்கு அவரே பொறுப்பாளி” மேலும் அவர் “நாங்கள் சமாஜ்வாதி கட்சிக்கு சென்ற மாநிலத் தேர்தலில் வாக்களித்தோம் ஆனால், அது அதிகாரத்திற்கு வந்தபிறகு எங்களின் எந்த எதிர்பார்ப்பையும் அது நிறைவேற்றவில்லை” என்றார். சமாஜ்வாதி கட்சி கலவரத்தின்போது நடவடிக்கை எடுக்காமல் சற்றே பின்வாங்கியபோது, பி.எஸ்.பி.யின் தலைவர் மாயாவதி நிலைமையினை உறுதியாகக் கட்டுக்குள் கொண்டுவரக் கோரும் எந்தக் கோரிக்கையையும் எழுப்பவில்லை ஏனெனில் அவர் இந்த வகுப்புவாத இரத்தக் கலவரம் முலயாம்சிங்கின் வாக்கு வங்கியின் ஒரு பகுதியை கவர்ந்து கொள்வதற்கு உதவி செய்யுமா என்று கவனித்துக் கொண்டிருந்தார். ஆகவே அவர் வேதனையிலிருந்த முஸ்லீம் மக்களைக் கையாள தனது பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைத்தார். அதே நேரத்தில் நாம் ஒரு விஷயத்தை மறந்து விடக்கூடாது இதே மாயாவதிதான் தனது தலித் செல்வாக்கை பயன்படுத்தி உயர்ஜாதி பிராமணர்களுக்கு எதிராக கூக்குரல் எழுப்பி மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை திசைமாற்றி தான் வெற்றிபெற வாக்களிக்கும்படி செய்தார். ஆனால் அதேசமயம், உயர்வகுப்பு இந்து பிராமணர்களின் கட்சி என்று அறியப்பட்ட இந்து அடிப்படைவாதக் கட்சியான பி.ஜே.பியுடன் கைகோர்த்துக் கொண்டு முதலமைச்சர் அதிகாரத்திற்கு வர அவர் சிறிதும் தயங்கவில்லை.

### ஓட்டு மற்றும் அதிகாரத்தைப் பெறுவதற்காக பதவி ஆசை தலைவிரித்தாடுகிறது

இந்தப் போட்டியில் காங்கிரஸின் பங்கு சற்றும் குறைவானதல்ல, வாரலாற்றுச் சிறப்புமிக்க பாபர் மசூதி இந்துத்துவ வெறிக்கும்பலால் இடிக்கப்பட்டபோது மத்தியில் அரசாங்க அதிகாரத்தில் இருந்த காங்கிரஸ் இந்தக் காட்டுமிராண்டித்தனமான குற்றம் நடைபெற அனுமதித்து, ரோம் நகர் தீப்பற்றி எரிந்தபோது பிடில் வாசித்துக்கொண்டிருந்த மன்னன் நீரோவைப்போல அமைதிகாத்தது. அன்று தடுப்பு நடவடிக்கைகளில் இறங்குவது வகுப்புவாத அடிப்படையில் துருவமயப்பட்டிருந்த இந்து வாக்கு வங்கியிலிருந்து காங்கிரஸ் பெரும் வாக்குகளைக் குறைத்து விடக்கூடும் என்பதே அவர்களின் அன்றைய அரசியல் கணக்காக இருந்தது. அதைப்போலவே இன்றும் கூட இம்மாதிரியான விரும்பத்தகாத கலவரங்களை 3 அல்லது 4 மணிநேரத்திற்குள்ளாகவே ஒடுக்கி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரத்தக்க வல்லமையுடன் கூடிய அரசு இயந்திரத்தை தன்வசம் வைத்திருக்கும் மத்திய அரசாங்கம் இருந்தும் கூட காங்கிரஸ் தலைமை தனது அரசாங்கம் கலவரத்தை அடக்கும் நடவடிக்கைகளில் இறங்குவதிலிருந்து பின்வாங்கச் செய்தது என்பதும் கூட, வகுப்புவாத அடிப்படையில் துருவமயப்படுத்தப்படும் சூழ்நிலைமையை பயன்படுத்தி அரசியல் ஆதாயத்தை அறுவடை செய்யும் குறுகிய நலன் காரணமாகத்தான் என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. ஆனால், எல்லாம் நடந்து முடிந்த பின்பு தற்போது சி.பி.ஐ விசாரணை கோருவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், கொல்லப்பட்டவர்களுக்காகவும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும், ராகுலும் விரைந்து சென்று முதலைக் கண்ணீர் வடிப்பது வெற்று பாவனையே ஆகும். ஆக நடந்தவையனைத்தும் கேடுகெட்ட பூர்ஷ்வா பாராளுமன்ற அரசியல் வாய்ப்புகளை எதிர்நோக்கி மக்கள் கவனத்தைத் திசைதிருப்ப திட்டமிடப்பட்ட உயர்மட்ட அரசியல் விளையாட்டு என்பதே ஆகும். வகுப்புவாத இரத்தக்களரியில் தங்களின் கரங்களைக் கறைபடுத்திக் கொண்டு ஓட்டுக்களைப் பங்குபோட்டு பறித்துக்கொள்ளும் விளையாட்டாகும். இந்த அரசியல் விளையாட்டில் யார் யாரெல்லாம் திறமையான ஆட்டக்காரர்கள் என்பது தற்போது வெட்ட வெளிச்சமாகத் தெரிய வருகிறது. போலி மார்க்சிஸ்டுகளின் கண்டிக்கத்தக்க பங்கு பூர்ஷ்வா கட்சிகளின் கேடுகெட்ட பங்கு இவ்வாறு இருந்துவரும் நிலையில், போலி மார்க்சிஸ்ட்களான சி.பி.ஐ, சி.பி.ஐ(எம்) ஆகிய கட்சிகள் தாமும் எவ்விதத்திலும் பின்தங்கவில்லை. இடதுசாரி மார்க்சிய பெயரை தாங்கிக் கொண்டிருந்தாலும் சி.பி.ஐ., சி.பி.ஐ(எம்) கட்சிகள் உழைக்கும் மக்களின் பற்றி எரியும் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரும் போராட்ட இயக்கங்களை நீண்ட காலத்திற்கு முன்பே கைவிட்டுவிட்டதுடன் அவை பூர்ஷுவா தேர்தல் அரசியலின் பங்கும் பகுதியாக மாறிவிட்டன. இன்று அவர்களின் ஒட்டுமொத்த நோக்கமே எப்படிப்பட்ட சந்தர்ப்பவாதத்தையும் கைக்கொண்டு தேர்தல் லாபத்தை அறுவடை செய்வது என்பதாக மாறிவிட்டது. மேலும் அவர்கள் சாதி, இனம், தேசிய இனம் மற்றும் மதம் என்ற எந்தப் பிரிவில் இருக்கின்ற மக்களின் இன்னல்கள், ஏழ்மைநிலை பற்றியோ அல்லது அதிகரித்துவரும் சாதியவாதம்–வகுப்புவாதம்–குறுகிய இனவாத பிரிவினை அபாயத்தினால் இன்னல்களையும் துன்பத்தையும் அனுபவித்துவரும் மக்களைப் பற்றியோ எந்தக் கவலை இன்றி இருந்துவருகிறார்கள். அவர்கள் மும்முரமாக ஈடுபட்டுவரும் விஷயமெல்லாம் எந்த அணி அதிக ஒட்டுக்களைப் பெற வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது, சில சீட்டுகளை வெல்ல தேர்தலில் யாரோடு அணிசேர்வது என்பதுதான். முன்பு காங்கிரஸின் ஏதேச்சதிகாரப்போக்கை எதிர்க்கிறோம் என்ற போலிக்காரணத்தை முன்வைத்து சி.பி.ஐ.(எம்) பி.ஜே.பி.யுடன் கைகோர்த்துக் கொண்டு மத்தியில் வி.பி.சிங் அரசாங்கத்திற்கு ஆதரவளித்தது என்பதை ஒருவர் இங்கு நினைவு கூர்வது நல்லது. பின்பு வகுப்புவாதத்தை முறியடிக்கிறோம் என்ற பெயரில் மத்தியில் அது காங்கிரஸ் தலைமையிலான யு.பி.ஏ அரசாங்கத்தை ஆதரித்தது. காங்கிரஸோடு அணிசேர்ந்ததன் மூலம் திரினாமூல் காங்கிரஸ் தன் அதிகாரத்திலிருந்து வெளியேற கட்சியின் மத்தியத்தலைமை இடமளித்துவிட்டது என்று, மேற்கு வங்கக் கட்சியின் தலைவர்கள் விமர்சித்தபோது சி.பி.ஐ(எம்)மின் பொதுச் செயலாளர் வகுப்புவாதத்திற்கு எதிராக மிகக் கடுமையாகப் பேசினார். பின்பு கேரளாவில் அவர்களின் பிரதான எதிர்கட்சியாக இருந்த காங்கிரஸ், மாநில அதிகாரத்திற்கான அரசியலில் தீவிரமாக விமர்சனக் கணைகளைத் தொடுத்தபோது, அதே சி.பி.ஐ(எம்) மின் பொதுச் செயலாளர் மத்தியில் காங்கிரஸின் தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் ‘நவீன தாராளவாத’ கொள்கைகளுக்கு எதிராக தனது கடும் விமர்சனத்தை உரத்துப் பேசினார். இவ்வாறு எந்தக் கொள்கையும், தார்மீக மரபுகள், சித்தாந்தமும் இல்லாத நிலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். ஒரு சில பாராளுமன்ற, சட்டமன்ற சீட்டுக்களை வெல்வதற்காக அவர்கள் யாரோடும் அது சந்திரபாபு நாயுடுவாக இருக்கட்டும் அல்லது முலயாம் சிங், மாயாவதி, ஜெயலலிதா யாராக இருக்கட்டும் அவர்களோடு அணிசேரத் தயங்குவதில்லை. எந்த ஒரு அதிமுக்கியத்துவம் கொண்ட அரசியல் பிரச்சினைகளிலும் கூட அவர்களின் எதிர்வினை என்பது அரசியல் லாபக் கணக்கின் அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. முசாபர்நகர் கலவரப்பிரச்சினையும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. மனிதகுலத்தின் மீது இழைக்கப்படுகின்ற இம்மாதிரியான கொடுங் குற்றங்கள் குறித்த சி.பி.ஐ.(எம்) மின் மிக மென்மையாகவே இருந்துவருகிறது. மற்றும் அவர்களின் எதிர்வினையாற்றும் தொனியும் எந்தஒரு அறியப்பட்ட பூர்ஷுவாக் கட்சியும் இது பற்றி அவநம்பிக்கையோடு கேலிபேசி நகைப்பதைப் போன்ற நிலைக்கு அதுவும் சென்றுவிட்டதோடு, இத்தகைய சம்பவங்களுக்குக் காரணமான அழுகிய சுரண்டல் முதலாளித்துவ அமைப்பு முறை மற்றும் அதற்கு சேவகம் செய்பவர்கள், அதன் பாதுகாவலர்களை மக்களிடமிருந்து மறைக்கும் வேலையைத்தான் இவர்கள் செய்கிறார்கள். ஆளும் வர்க்கத்தின் கெடு நோக்கத் திட்டங்களான, வெறிவாதம், பரஸ்பரம் வெறுப்பை வளர்த்துவிடுதல் வகுப்புவாதக் கலவரங்களைத் தூண்டிவிடுதல் அப்பாவி ஏழை மக்கள் மீது மிருகத்தனமான கொடுந்தாக்குதலினால்

தொடர்ச்சி 7ம் பக்கம்

முசாபர்நகரில்...

# போலி மார்க்சிஸ்டுகள் போராட்டப் பாதையை விட்டு விலகிய சூழ்நிலை மதவாத–ஜாதியவாத சக்திகள் வளர உதவியது

6ம் பக்கம் தொடர்ச்சி

மக்கள்படும் துன்பதுயரங்களை அவலங்களைக் கண்டு நகைத்தல், ஆகியவற்றின் மூலம் உழைக்கும் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் அதன் அரசியல் ஏஜன்டுகளை, மிகக் கடுமையாகவும் முழுவதுமாகவும் மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டியதென்பது இத்தருணத்தின் அவசியமாக இருக்க, சி.பி.ஐ.(எம்) மின் தலைமை வெட்கமற்ற வகையில் மிக அலட்சியமாக வழக்கமான சம்பிரதாய வார்த்தைகளை உதிர்த்து, வகுப்புவாதத் தீ மூட்டும் சாத்தான்களுக்கு ஒழுக்கநெறி பற்றி வேதம் ஓதுகிறார்கள். இதன் மூலம் அது சீரழிந்த அழுகிய அடிமுதல் நுனிவரையில் ஊழல் புரையோடிப் போன, மக்கள் வாழ்க்கையின் அனைத்துத் துன்பம் மற்றும் கேடுகளுக்கும் மூலகாரணமான முதலாளித்துவ அமைப்புமுறையினை திரையிட்டு மறைக்கிறது. ஏனெனில் அது எந்தப்பக்கத்து அணி வாக்குகளை அதிகம் பெறும், இந்த கறைபடிந்த கட்சிகளுக்குள் யாரோடு தேர்தல் கூட்டணி அமைத்து தேர்தல் ஆற்றைக் கடக்கலாம் என்று கணக்குப்போட்டுக் கொண்டிருக்கிறது.

## தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலின் வித்தை

இந்தக் கட்சிகள் அனைத்தின் லட்சணமும் முசாபர்நகர் கலவர சம்பவத்தின் பின்னணியில் செப்டம்பர் **23** அன்று மத்திய அரசாங்கத்தினால் கூட்டப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்தில் மிக அப்பட்டமாக வெளிப்பட்டது. இக்கூட்டம் வகுப்புவாத வன்முறைகள் குறித்தும், பெண்களின் மீதான தாக்குதல்கள் குறித்தும் மற்றும் எஸ்,சி. எஸ்.டி பிரிவினர் மீதான கொடுமைகள் குறித்தும் பேசுவதற்கான கூட்டம் என்று முன்னமே அறிவிக்கப்பட்டிருந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மற்றும் முசாபர்நகரிலும் கிளர்ந்துள்ள நிலைமைகள் குறித்தும் மற்றும் இதில் ஈடுபட்டுள்ள குற்றவாளிகளை அடையாளம் காணுவது குறித்தும் மிக சிரத்தையுடனும் ஈடுபாட்டுடனும் விவாதித்திருக்கவேண்டிய இக்கூட்டம் அதிகாரமாடத்தில் உலாவந்து அன்றாடம் பத்திரிகையின் தலைப்புச் செய்திகளில் இடம்பெறுகின்ற அரசியல் தலைவர்கள் தங்களின் பரிகாசங்களை ஒருவொருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் சம்பிரதாயமான பகட்டுத் தேநீர் விருந்தாக முடிந்துபோனது. வகுப்புவாத கலவரத்தைக் கண்டனம் செய்து ஒரு தீர்மானம் கூட இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவில்லை. இன்னும் நிலைமை என்னவாக இருந்ததென்றால், வகுப்புவாதத்தினை தூண்டிவிட்டு கலவரத்தை ஏற்படுத்தியதற்காக குற்றம்சாட்டப்பட வேண்டிய பி.ஜே.பி இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் சந்திர பாபு நாயுடு கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தார். இக்கூட்டம் கூட்டப்பட்டதினால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்ப துயரங்கள் பற்றி கருணை மழை பொழிய எழுதித் தள்ளியதும், ஏராளமான குப்பை சேர்ந்ததையும் தவிர உருப்படியான காரியமும் எதும் நடைபெறவில்லை. சி.பி.ஐ.(எம்)மின் தலைவர்களும் கூட போதிய உறுதித்தன்மையோடு எந்த ஒரு கேள்வியையும் முன்வைப்பதைத் தவிர்த்து மிக வழக்கமாகச் செய்யப்படுகின்ற பிறரைப் புண்படுத்தாத குறிப்புகளை சமர்ப்பித்து தங்கள் பொறுப்புகளை முடித்துக் கொண்டார்கள். சி.பி.ஐ.(எம்) மின் பொதுச்செயலாளர் அவரது உரையில், வகுப்புவாதத்தை பின்பற்றும் சில அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் வகுப்புவாதத்தை பரப்பும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவருகின்றன இதனால் எழும் பதற்றத்தினால் எங்கேனும் நிகழும் எந்த ஒரு சம்பவத்தையும் பயன்படுத்தி வகுப்புவாத வன்முறையைத் தூண்டிவிட்டு அதன் மூலம் வகுப்புவாத அடிப்படையில் மக்களைத் இருபெரும் கூறுகளாகப் பிரித்து அதிலிருந்து ஆதாயமடைகின்றன என்று மட்டும் குறிப்பிட்டார். அவர் இதில் ஈடுபட்ட கட்சிகள் மற்றும் அமைப்புகள் எவை என்பது குறித்தோ அல்லது மக்களை இரத்தம் பாய்ந்தோடும் இப்படிப்பட்ட சகோதரச் சண்டையில் மூழ்கடித்த அவர்கள் எப்படிப்பட்ட தண்டனைக்கும் புறக்கணிப்பிற்கும் உள்ளாக்கப்பட வேண்டும் என்பது குறித்தோ எந்த குறிப்பையும் முன்வைக்கவில்லை. இதற்கு வேறென்ன காரணம் இருந்து விடமுடியும்? அதாவது, வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் மிகவும் சக்திவாய்ந்த பூர்ஷுவா வர்க்கத்தின் ஒரு பகுதியினர் ஆர்.எஸ்.எஸ்–பி.ஜே.பியை ஆதரிக்கின்றன என்பதை சி.பி.ஐ.(எம்)மின் தலைவர்கள் நன்றாகவே அறிந்திருக்கிறார்கள் என்பதுதான். ஆகவேதான், அவர்கள் சங்கப்பரிவாரக் கூட்டணிக்கெதிராக எந்த ஒரு கடுமையான வார்த்தைகளையும் உதிர்ப்பதிலிருந்து தயக்கப்படுகிறார்கள், குறைந்தபட்சம் ஆளும்வர்க்கத்தைப் பகைத்துக் கொள்ளக்கூடாது அவர்களின் அனுக்கிரகத்தை இழந்து விடக்கூடாது என்ற நிலை எடுக்கிறார்கள். ஆகவே அவர்கள், ஆர்.எஸ்.எஸ்–பி.ஜே.பி.யிடம் ஒரு மென்மையான எதிர்ப்பை மட்டுமே காட்டும் எல்லையோடு நின்றுவிடுகிறார்கள், அதுவும் கூட மக்கள் பார்வைக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தானே தவிர வேறொன்றும் இல்லை. தேர்தல் ஆதாயத்திற்காக, அவர்கள் காங்கிரசையோ அல்லது முலாயம்சிங்கையோ அல்லது யாரையும் பகைத்துக் கொள்ளமாட்டார்கள். ஆகவே, மக்கள் வன்முறையில் தங்களுக்குள் வெட்டிக் கொண்டு மடியும் போது யார் மீதும் குற்றம் சாட்டாமல் தங்கள் மீதும் விமர்சனம் வந்துவிடாமல் மௌனம் சாதிப்பது அவர்களுக்கு பாதுகாப்பு வளையமாகும். மேலும் முசாபர்நகருக்குச் சென்ற உண்மையறியும் குழுவிலும் கூட, நடந்த கலவரம் மற்றும் மோதல்களில் அரசியல் கட்சிகளுக்கு சம்பந்தம் இருக்கிறதா என்ற கேள்வியை சி.பி.ஐ.(எம்)மின் தலைவர்கள் தவிர்த்தார்கள். இது மீண்டும் ஒருமுறை எவ்வாறு சி.பி.ஐ(எம்) மற்றும் அதன் சகாக்கள் கேடுகெட்ட பூர்ஷுவாவர்க்கத் திட்டத்தின் பங்கும் பகுதியுமாக மாறி மக்கள் வாழ்க்கையைப் பந்தாடுகிறார்கள், ஊழல் செய்து வயிறு வளர்க்கும் ஓட்டுப் பறிக்கும் கட்சிகளின் கூட்டணிகளோடு கைகோர்த்து பூர்ஷுவா வாக்கு அரசியல் வஞ்சக விளையாட்டில் ஈடுபடுகிறார்கள் என்பதை காட்டுகிறது.

## பூர்ஷ்வா பிரச்சார ஊடகங்கள் உண்மையை மூடிமறைக்கின்றன

மேற்சொன்ன விவாதத்தின்படி முசாபர்நகர் வகுப்புவாதக் கலவரம் கடந்தகாலத்தின் இவை போன்ற கலவரங்களைப் போலவே தன்னெழுச்சியாக வெடித்தெழுந்த ஒரு சம்பவம் அல்ல மாறாக தேர்தல் ஆதாயத்திற்காக பூர்ஷுவா ஓட்டு வியாபாரத்தில் ஈடுபடும் கட்சிகள் மற்றும் போலி மார்க்சிஸ்டுகளான சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ. கட்சிகள் உட்பட அனைத்தும் திட்டமிட்டு, கட்டமைத்து கவனமாக செயல்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கிறது. சமீப காலங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகின்ற வகுப்புவாத–சாதியவாதக் கலவரங்கள் குறித்து உண்மையில் கவலையும் அக்கறையும் கொள்ளும் நற்சிந்தனையுடையவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில், பெரும்பான்மையான ஊடகங்கள் ஏகபோகக் குழுமங்களின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதனால், இந்த முசாபர்நகர் கலவரத்தினைத் தூண்டியதில் பிரதான அரசியல் கட்சிகளுக்கும் அதன் மேல்மட்டத் தலைவர்களுக்கும் இருக்கின்ற சம்பந்தத்தை நேரடியாகச் சொல்லமுடியாவிட்டாலும் மக்கள் விழிப்புணர்வின் நிர்ப்பந்தம் காரணமாக சில உண்மைகளை வெளியிடுகின்றன, மேலும் தேர்தலுக்கான மணியோசை கேட்கிற போது இம்மாதிரியான கலவரச் சம்பவங்கள் வழக்கமான ஒன்றுதான் புதிதல்ல என்பதைப்போன்ற ஒரு தோற்றம் உருவாக்கப்படவும் ஊடகங்கள் முயல்கின்றன. உ.பி 80 பாராளுமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு மாநிலம் என்பது அறிந்ததே, உ.பி.யிலிருந்து உத்தரகாண்ட் மாநிலம் பிரிக்கப்பட்டுவிட்ட பின்னரும் கூட மத்தியில் அரசாங்கம் அமைப்பதில் உ.பி மிக முக்கியமான பங்குவகிக்கிறது. தற்போது ஊடகங்கள் இந்தக் கலவரத்திற்குப் பின்பு யார் தங்களின் ஓட்டு சதவிகிதத்தை அதிகரித்துக் கொள்ளப் போகிறார்கள். யாருக்கு வெற்றி யாருக்கு தோல்வி என்று தேர்தல் வாக்குக் கணக்குகளை அலசி ஆராய்வதில் மும்முரமாக இருக்கிறார்கள். ஆனால் மிகவும் ஆபாயமான விஷயம் என்னவெனில் இத்தகைய வகுப்புவாதக் கலவரங்கள் தேர்தலுக்கு முன்பு மட்டுமல்ல ஆண்டுமுழுவதிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்காகவும் ஒருவரையொருவர் பகைகொள்ளச் செய்வதற்கும் உருவாக்கப்படுகின்றன.

## மக்கள் கிளர்ந்தெழுந்து எதிர்க்க வேண்டும்

வகுப்புவாத–சாதியவாத கட்டுவிரியன்கள் மக்களிடையே பகைமை, வேற்றுமை, வெறுப்பு, என்ற விஷத்தைப் பரப்புகிறபோது, வர்க்கச் சார்பு கொண்ட பூர்ஷுவா கட்சிகளும் போலி மார்க்சிஸ்ட்களும் அதிகாரம் மற்றும் பதவிக்காக இந்த விஷம் கக்கும் கட்டுவிரியன்களை தங்கள் காலுக்கடியில் வைத்து மறைத்துக் கொண்டு மகிழும் வேளையில், மரண வியாபாரிகளால் இந்த நாடு ஒரு கொலைக் களமாக மாற்றப்பட்டு மக்களின் இரத்தத்திலும் சதையிலும் விருந்துண்டு மகிழும் இவ்வேளையில், விழிப்புணர்வு கொண்ட எந்த ஒரு மனிதனும் இந்த ஆரவாரப்பேய்களுக்கு சாஷ்டாங்கமாகப் பணிந்து மௌனமாக இருந்து தன்னைத் தானே சிறுமைப்படுத்திக் கொள்ளமுடியுமா? நிச்சயமாக முடியாது.

மக்கள் தம்மை பிரித்தாளுகின்ற இந்த அனைத்து தீய சக்திகளுக்கும் எதிராக போர்க்குணமிக்க எதிர்ப்பியக்கங்களில் இறங்குவதோடு தங்களின் வலுவான ஒற்றுமையின் பலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் அவர்களின் சூழ்ச்சியை முறியடிக்கவேண்டும். தேசம் முழுவதிலும் மக்கள் போராட்டங்கள் கிளர்ந்தெழவேண்டும், அரசாங்கம் உடனடியாக உரிய, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும், வகுப்புவாத–சாதியவாத மோதல்கள் மேலும் பரவாதவாறு தடுக்கவும், முசாபர் நகர் கலவரத்திற்கு காரணமான கயவர்கள் அனைவரையும் கைது செய்து உரிய தண்டனை வழங்கிட வலியுறுத்தியும் நன்கு அணிதிரட்டப்பட்ட ஒரு சக்திவாய்ந்த இயக்கம் முடுக்கிவிடப்பட வேண்டும் அவ்வாறு செய்தால் மட்டுமே எதிர்காலத்தில் மீண்டும் இவற்றை நடத்த அவர்கள் துணியமாட்டார்கள். அதே நேரத்தில், இந்த கலவரத்தினால் பாதிக்கப்பட்டு சின்னாபின்னாப்பட்ட மக்களிடையே நம்பிக்கையையும், இணக்கத்தையும் உடனடியாக மீட்டெடுத்து, இடம்பெயர்க்கப்பட்ட அனைவரையும் மறுகுடியமர்த்தி புனர்வாழ்வளிப்பதுடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு போதிய இழப்பீடும் வழங்க வேண்டும், நாட்டின் மதிப்புமிக்க உயர்ந்த மனிதர்கள், அரசியல் இயக்கங்கள், ஜனநாயகப்பூர்வமான அமைப்புகளின் தலைமையில் அமைதிகாக்கும் கமிட்டிகளையும் ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வது இன்றைய உடனடித் தேவையாக இருக்கும் அதே வேளையில், இந்த வகுப்புவாதக் கட்டுவிரியன்களின் தாக்குதல்களுக்கு எதிராக மிகப் பெரும் தடையரண்களை எழுப்பவேண்டும்.

அத்தகைய தடையரண்கள், பெரும்பான்மை உழைக்கும் மக்கள் தங்களின் சாதி–மத–இன பாகுபாட்டு அடையாளங்களைத் துறந்து இந்த இரக்கமற்ற கொடிய முதலாளித்துவ ஆட்சிக்கெதிராகவும் மற்றும் அதன் பல்வேறு நிறம் கொண்ட பாதுகாவலர்களுக்கு எதிராகவும் போராடுவதில் தங்களின் பொது நலனை அடையாளம் கண்டுகொண்டு தங்களது ஒற்றுமையை வலுப்படுத்தி, குன்றென உறுதியோடு எழுந்து நின்று, பற்றி எரியும் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கோரி உயர்ந்த பாட்டாளி வர்க்க நீதிநெறி, கலாச்சாரத்தின் அடிப்படையில் வர்க்க மற்றும் வெகுஜன இயக்கங்களை உக்கிரப்படுத்த முன்வந்தால் மட்டுமே அத்தகைய தடையரண்களை எழுப்பமுடியும். அப்படிப்பட்ட நீண்ட நீடித்த சக்திவாய்ந்த விழிப்புணர்வுகொண்ட வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்கள் மூலமே கெடு நோக்கம் கொண்டவர்கள் மக்களிடையே தூண்டிவிட முயலும் அனைத்துவகையான பரஸ்பர பகைமையும், வெறுப்பும், வேற்றுமையும் துடைத்தெறியப் படமுடியும் மேலும் வகுப்புவாத–சாதியவாத–குறுகிய இனவாத உணர்வுகளைத் திட்டமிட்டுப் பரப்பமுயலும் தீயசக்திகளுக்கு பலமான சித்தாந்த தோல்வியைக் கொடுக்கமுடியும்.

இந்த மேற்சொன்ன அனைத்துவகையான பிரிவினை மற்றும் வஞ்சக அரசியல் சக்திகளுக்கு எதிராக வர்க்க மற்றும் வெகுஜன போராட்டத்தின் புரட்சிகரமான இந்தத் திசைவழி இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவரும் கட்சியின் ஸ்தாபகப் பொதுச்செயலாளருமான தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனை என்னும் ஆயுதம் தரித்த எஸ்.யு.சி.ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியால் மட்டுமே தன்னந்தனியாக உயர்த்திப்பிடிக்கப்படுகிறது. சமுதாயத்தின் சீரழிந்த போக்கிற்கு எதிரான திசைவழியில் எஸ்.யு.சி.ஐ (கம்யூனிஸ்ட்) இந்த அனைத்துப் போராட்ட இயக்கங்களையும் கட்டியமைத்து வளர்த்து வருகிறது. அத்தகைய போராட்டங்களில் பங்கெடுப்பதன் மூலம் இயக்கத்தினை வலுப்படுத்த முன்வருமாறும், அதன்மூலம் ஆளும் வர்க்கத்தின் அனைத்து சதிவேலைகளையும் மற்றும் மக்களில் ஒருபகுதியினருக்கெதிராக பிறபகுதியினரை பகைகொள்ளச் செய்து சகோதர மோதல்களுக்குள் அவர்களை இழுத்துவிடும் அதன் சேவகர்களை முறியடிக்க முன்வருமாறும் அனைவரையும் அறைகூவி அழைக்கிறோம்.

## வடகொரியா–பியோங்யாங்

# வரலாற்றுச் சிறப்புமிக்க தந்தையர் நாட்டு விடுதலைப் போர் வெற்றியின் 60வது ஆண்டுதினக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் தோழர் மணிக் முகர்ஜி பங்கேற்பு

தந்தையர் நாட்டு விடுதலைப் போர் வெற்றி பெற்றதன் 60வது ஆண்டைக் கொண்டாடுவதற்காக ஆப்ரோ – ஆசியன் சகோதர ஒத்துழைப்புக்கான (ஆப்பிரிக்க – ஆசிய சகோதர ஒத்துழைப்பிற்கான) கொரிய கமிட்டி விடுத்த அழைப்பிற்கிணங்க சர்வ தேச ஏகாதிபத்திய – எதிர்ப்பு ஒருங்கிணைப்புக் கமிட்டியின் தலைவர் ராம்சே கிளார்க், பொதுச்செய லாளர் மணிக் முகர்ஜி ஆகியோர் அடங்கிய குழு ஜூலை 22–28 வரை ஒரு வாரம் நடைபெற்ற விழாவில் பங்கேற்க பியோங்யாங் சென்றிருந்தனர்.



விடுதலைப்போரின் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் பியோங்யாங், வடகொரியாவில் நடைபெற்றது. இதில் ராம்சே கிளார்க் (இடது கோடி) மற்றும் மணிக்முகர்ஜி (இடமிருந்து மூன்றாமவர்)

வளமும் பிரத்யேகமான கலாச்சாரமும் மொழியும் அதோடு தனித்த தேசிய அடையாளமும் கொண்ட கொரிய மக்கள் 1905 முதல் 40 ஆண்டு களுக்கும் மேலாக கொடூரமான ஜப்பான் ஏகாதி பத்திய ஆக்கிரமிப்பினால் துன்பப்பட்டுவந்தனர். கிம் இல் சங்–ன் தந்தை கிம் க்யோங் ஜிக் ஜப்பான்–எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தை பாட்டாளிவர்க்கப் புரட்சியாக மாற்றுவதற்காக 1917ல் ஜப்பான்– எதிர்ப்பு தலைமறைவு புரட்சிகர அமைப்பான கொரியர்கள் தேசியக் கூட்டமைப்பைத் (கொரியன் நேசனல் அசோசியேசனை)த் தொடங் கினார். 1926ல் கிம் க்யோங் ஜிக்–ன் மறைவைத் தொடர்ந்து கிம் ல் சங் தலைமைப் பொறுப்பேற்றார். புரட்சிகர இயக்கத்திற்கு புதிய உத்வேகம் கொடுப் பதற்காக ஏகாதிபத்தியம் ஒழிக சங்கத்தை உருவாக் கினார். 1929ல் ஜப்பான் ஏகாதிபத்தியவாதிகளின் வலியுறுத்தலுக்கு இணங்க சீன பிற்போக்கு போர் பிரபுக்களால் இவர் கைது செய்யப்பட்டார். சிறை யிலிருந்து 1930ல் விடுதலையானதும் கம்யூனிஸ்ட் இளைஞர் லீக் மற்றும் ஏகாதிபத்திய–எதிர்ப்பு இளைஞர் லீக் கூட்டத்தில் அவர் சிறையில் வடி வமைத்த ஜூச்சே – சார்பு கொரியர் சோசலிசப் புரட்சிக் கருத்தின் கோட்பாடுகளை அங்கே முன் வைத்து விளக்கினார். கொரிய புரட்சியின் ஏகாதி பத்திய–எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ–எதிர்ப்பு ஜன நாயகப்புரட்சி குணாம்சத்தை அவர் வரையறுத்தார், அதோடு அதன் போர் தந்திரம் மற்றும் போர் உபாயங் களை 'கொரியப் புரட்சியின் பாதை' என்ற புகழ் பெற்ற அறிக்கையில் தெளிவுபடுத்தினார். ஜன நாயகப் புரட்சி நிறைவடைந்த பின்னரும் சோசலிசம் மற்றும் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற் காகவும் உலகப்புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற் காகவும் புரட்சியைத் தொடரவேண்டும் என்றும் அவர் பிரகடனம் செய்தார். ஒன்றுபட்ட ஜப்பானிய–எதிர்ப்பு தேசிய முன்னணியையும் புரட்சிகரக் கட்சி யையும் உருவாக்குவதன் முக்கியத்துவத்தை அவர் கூறினார். 1930ல் முதல் கட்சி அமைப்பு உருவாக்கப் பட்டது, அதனைத் தொடர்ந்து விரைவில் கொரிய மக்கள் புரட்சிகர ராணுவம் (KPRA) நிறுவப்பட்டது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான கொரில்லா ராணுவத்துடன் நெருங்கிய ஒருங் கிணைப்போடு பாடுபட்ட கிம் இல் சங் ஒருங் கிணைந்த ராணுவத்தின் ஒரு பிரிவுக்குத் தளபதியாக விளங்கினார். இதன்போக்கில் ஜப்பானிய–எதிர்ப்பு ஆயுதப் போராட்டம் உக்கிரமடைந்தது.

ஆகஸ்ட் 15, 1945ல் ஜப்பான் ராணுவம் சரண டைந்தது, கொரியா விடுதலை பெற்றது. ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையில் தேர்தல் மூலமாக சுதந்திரமான அனைத்து–கொரிய அரசாங்கம் ஏற் படுத்துவதற்கு முன்னோடியாக நாட்டின் 38வது இணையின் வட மற்றும் தென் பகுதிகள் முறையே சோவியத் யூனியன் மற்றும் யு.எஸ்.–இன் கட்டுப் பாட்டில் வந்தது. வடக்கில் நிர்வாகத்தை நடத்துவதற் காக தற்காலிக மக்கள் கமிட்டியின் தலைவராக கிம் இல் சங் பொறுப்பேற்றார். அது இறுதியில் சோசலிச அரசாக, அவரது தலைமையில் கொரிய ஜனநாயக மக்கள்குடியரசு மலர்வதற்கு இட்டுச் சென்றது. ஆனால் தெற்குப் பகுதியில் யுஎஸ். ஆக்கிர மிப்புப் படைகள் தற்காலிக மக்கள் கமிட்டிகளை அடக்குமுறையாக ஒடுக்கின, அதோடு தேசிய விடுதலைப் போராட்டத்தின் விருப்பங்களுக்குத் துரோகமிழைத்து தென்கொரியாவில் 1948ல் கம்யூனிச–விரோத முதலாளித்துவ சர்வாதிகார அமைப்பு உருவாக்கப்பட்டது. அவர்களது ஆக் ரோச ராணுவ நடவடிக்கை 1950ல் டி.பி.ஆர்.கே. வுடன் போருக்கும் கூட இட்டுச்சென்றது. ஜூலை 27, 1953ல் இரு கொரியாவையும் பிரிக்கும் 38வது இணையை ராணுவமற்ற பகுதியாக்கும் ஆர்மிஸ் டைஸ் (போர் நிறுத்த உடன்படிக்கை) கையெழுத்திடும் வரை டி.பி.ஆர்.கே. தனது அதிகாரத்தை நிலை நாட்டிவந்தது. இருப்பினும், வடகொரியா (டி.பி. ஆர்.கே.) கோரிவரும் சமாதான உடன்படிக்கை இதுவரை கையெழுத்திடப்படவில்லை. ஜூலை 27ஐ தந்தைநாட்டு விடுதலைப் போரின் வெற்றிதினமாக டி.பி.ஆர்.கே. அனுஷ்டித்து வருகிறது. 1948லேயே வடபகுதியை விட்டு ரஷ்யப் படைகள் வெளியேறி விட்ட நிலையில் தென்கொரியாவிலோ தங்களது ஏகாதிபத்திய வல்லாதிக்கத்தை நிலையாக வைத் திருப்பதற்காக அங்கு அமெரிக்கப்படைகள் இன்றும் நிறுத்தப்பட்டுள்ளன.

வடக்குப் பகுதியில் புரட்சிகர சக்திகளையும் தெற்கில் முற்போக்கும் மற்றும் தேசபக்த சக்தி களையும் ஒன்றிணைத்து கொரியா முழுவதும் ஏகாதி பத்திய–எதிர்ப்புக் கூட்டணியை உருவாக்குவதற்கு மாபெரும் தலைவர் கிம் இல் சங் தொடர்ந்து வலி யுறுத்தி வந்தார். 1971லேயே மாபெரும் தலைவர் கிம் இல் சங் தென் கொரியாவின் ஆளும் கட்சி அல்லது முக்கியப் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த டி.பி.ஆர்.கே. தயாராக இருப்பதாக அறிவித் தார். அவருடைய முன்முயற்சியில் எந்தவொரு அந்நியத்தலையீடும் இன்றி அமைதியான வழியில் மீண்டிணைவதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை வரையறுக்கும் வட–தென் கூட்டறிக்கை ஜூலை 4, 1972ல் கையொப்பமானது. ஆனால் அமெரிக்க தூண்டுதலால் தென்கொரிய பிற்போக்கு பொம்மை அரசாங்கம் இந்த முன்மொழிவுகளை விட்டு விலகியது. மாறாக டி.பி.ஆர்.கே.வை தீமையின் அச்சு (Axis of Evil) தேய சக்தி என்று யு.எஸ்.ஏ. அவதூறாக முத்திரை குத்தியது. அமைதியான வழியில் நாட்டை மீண்டும் இணைப்பதற்காக ஒட்டுமொத்த தேசத்தின் மாபெரும் ஒற்றுமைக்காக 1993ல் அதிபர் கிம் இல் சங் 10 அம்ச திட்டத்தை வெளியிட்டார். கிம் இல் சங் அவர்களின் கொள்கைகளை அவரைத் தொடர்ந்து வந்த இல் கிம் ஜோங் அவர்களால் மீண்டும் வலியுறுத்தப்பட்டு பலப்படுத்தப்பட்டன. இரு நாடுகளையும் மீண்டிணைக்கவும் அமைதிக் காகவும் 2000 மற்றும் 2007ல் குறைந்தது இரண்டு பிரகடனங்கள் வெளியிடப்பட்டது. ஆனால் 2008ல் அமெரிக்க ஆதரவோடு தென்கொரியாவில் அதி காரத்திற்கு வந்த லீ மியாங் பக் இன் பாசிச ஆட்சி தேசத்தை மீண்டிணைப்பதற்கான கொஞ்சநஞ்ச முன்னேற்றத்தையும் இல்லாமல் செய்தது. வடக்கு – தெற்கு பதற்றங்கள் உக்கிரமடைந்தன. 1950ல் டி.பி.ஆர்.கே. (வடகொரியா) மீது அமெரிக்கா கிட்டத் தட்ட முழு பொருளாதாரத் தடையைத் திணித்தது. பிப்ரவரி 2013ல் நிலத்தடியில் அணுசக்திப் பரி சோதனையை டி.பி.ஆர்.கே. (வடகொரியா) நடத்தி யதை அடுத்து அதற்கு எதிராக அமெரிக்காவும் தென்கொரிய அரசாங்கமும் பழிவாங்கும் ராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று அச்சுறுத்திய தோடு கூட்டு ராணுவ போர் ஒத்திகையிலும் ஈடு பட்டன. ஆனால் கிம் ஜோங் யுன் அவர்கள் தலைமையிலான டி.பி.ஆர்.கே. (வட கொரியா) அமெரிக்காவின் அச்சுறுத்தல்களுக்குப் பணிய வில்லை. அதனால் வேறு வழியின்றி டி.பி.ஆர்.கே. வுடன் பேச்சுவார்த்தையில் அமரவேண்டிய நிர்ப் பந்தத்திற்கு தென்கொரியா தள்ளப்பட்டது.

இந்தப் பின்னணியில் தந்தையர் நாட்டு விடுதலைப் போர் வெற்றியின் 60ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு டி.பி.ஆர்.கே. விரி வான ஏற்பாடுகளைச் செய்தது. சீன மக்கள் குடியரசின் துணை அதிபர், இந்தியாவிலிருந்து சி.பி.ஐ(எம்), பிஜேபி, காங்கிரஸ் அடங்கிய அதிகாரப் பூர்வப் பிரதிநிதிகள் உள்ளடக்கிய பல்வேறு நாடு களிலிருந்து வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் சர்வதேச ஏகாதிபத்திய–எதிர்ப்பு ஒருங்கிணைப்புக் கமிட்டியின் தலைவர் ராம்சே கிளார்க், அதன் பொதுச் செயலாளரும் எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினருமான மணிக் முகர்ஜியும் அடங்குவர். கொண்டாட்டங்கள் அற்புத மாகவும் வண்ணமயமாகவும் இருந்தன, பெண்கள் குழந்தைகள் உள்ளடக்கிய பெருந்திரளான மக்கள் மகிழ்ச்சிபொங்க கலந்துகொண்டனர். அமைதியான வழியில் கொரியா இணைக்கப்பட வேண்டும், அமைதி ஒப்பந்தத்தில் அமெரிக்கா கையெழுத்திட வேண்டும், போரை நிறுத்த வேண்டும், டி.பி.ஆர்.கே. உடனான அனைத்து பகைமைப் போக்கையும் கை விடவேண்டும், தென்கொரியாவிலிருந்து அனைத்துப் படைகள், அணு ஆயுதங்கள் உள்ளிட்ட போர்த் தளவாடங்களைத் திரும்பப் பெறவேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 24ல் நடை பெற்ற பிரம்மாண்டமான சர்வதேச அமைதிப் பேரணியும் நடைபெற்றது. ராம்சே கிளார்க்கும் மணிக் முகர்ஜியும் பேரணியில் பங்கேற்றனர். அதே நாளில் இரு கொரியாக்களின் முக்கியமான கூட்டுப் பொருளாதாரத் திட்டப் பகுதியில் சர்வதேச சகோதர ஒத்துழைப்புக் கூட்டம் நடைபெற்றது. கொரியப் போரில் அமெரிக்காவின் அத்துமீறல் கொடூரங்கள் பற்றி ஜூலை 25 அன்று நடைபெற்ற சர்வதேசக் கூட்டத்தில் ராம்சே கிளார்க் உரையாற்றினார். டி.பி.ஆர்.கே. மற்றும் பல்வேறு பிற நாடுகளின் மீதான அமெரிக்காவின் ஏகாதிபத்தியத் தாக்குதல்கள் பற்றியும் அவற்றிற்கெதிராக பெருகிவரும் மக்கள் எதிர்ப்பையும் பற்றி அவர் பேசினார். வெளிநாட்டுத் தாக்குதலிலிருந்து தங்களது தந்தையர் நாட்டைப் பாதுகாப்பதற்காக வடகொரிய மக்கள் நடத்தும் உறுதியான போராட்டத்தில் உலகின் நீதி மற்றும் அமைதியை நேசிக்கும் மக்கள் அனைவரும் சகோதர ஒத்துழைப்பு நல்குவர் என்று அவர் கூறினார்.

தந்தையர் நாட்டு விடுதலைப் போர் தியாகிகள் கல்லறையையும் போர் அருங்காட்சியகத்தையும் ஜூலை 25ல் உயர்தலைவர் கிம் ஜோங் யுன் தொடங்கி வைத்தார். ஜூலை 26ல் பியோங்யாங்–ன் மே தின அரங்கில் (ஸ்டேடியத்தில்) தேசியப் பெருந் திரள்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு உயர்தலைவர் கிம் ஜோங் யுன் தலைமை வகித்தார். அதில் கொரியத் தொழிலாளர் கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொலிட் பீரோ தலைமை உறுப்பினர் கிம் யோங் நம் உள்ளிட்ட கொரிய தொழிலாளர் கட்சியின், அரசின், ராணுவத்தின் மூத்த அதிகாரிகள் (தலைவர்கள்), டி.பி.ஆர்.கே. சுப்ரீம் மக்கள் சபைக் கூட்டத்தின் தலைவரும் பங்கேற்றனர். ஜூலை 26ல் மிகப்பிரம்மாண்டமான கண்கவர் ராணுவ அணிவகுப்பும் மக்கள் பேரணியும் நடைபெற்றது. கிம் இல் சங் சதுக்கத்தில் மேற்பார்வை வரிசையில் உயர் தலைவர் கிம் ஜோங் யுன், கொரியத் தொழி லாளர் கட்சி, அரசு மற்றும் ராணுவத்தின் உயர் தலைவர்கள், அதோடு சீனத் துணை அதிபர் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அமர்ந்திருந்தனர். மக்கள் சபையின் துணைத்தலைவர் பூங்கொத்து அளித்து பிரதிநிதிகளை வரவேற்றார். டி.பி.ஆர்.கே. மற்றும் வெளிநாடுகளின் முக்கியப் பிரமுகர்களோடு பிரதான மேஜையில் அமரும் கௌரவத்தை மணிக் முகர்ஜி பெற்றார். பியோங்யங் நகரத்தைப் பெருமைப் படுத்தும் கிம் இல் சங் மற்றும் கிம் ஜோங் இல் ஆகியோரின் நினைவு மௌசோலியம் பிரம மாண்டமான சிற்பங்களையும் சிலைகளையும் மகிழ்ச்சியைத் தூண்டும் இடங்களையும் மற்ற பிரதி நிதிகளோடு மணிக் முகர்ஜியும் கண்டுகளித்தார். அந்நாட்டின் மக்களின் கொண்டாட்டங்களின் நீங்கா நினைவுகளோடு பிரதிநிதிகள் திரும்பினர்.

# இந்திய விடுதலையியக்கத்தின் சமரசமற்ற தலைவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 92வது நினைவு தின நிகழ்ச்சிகள்

1882ல் எட்டயபுரத்தில் டிச 11 அன்று பிறந்து 1921ல் சென்னையில் செப்11ல் மறைந்த சுப்பிரமணிய பாரதியாரின் 39 ஆண்டுகால வாழ்க்கை இந்திய தேசிய விடுதலை வரலாற்றிலும் தமிழின், தமிழ் மக்களின் வளர்ச்சியிலும் அழிக்கயிலாத முத்தி ரையை பதித்துச் சென்றுள்ளது. 11 வயதினிலேயே தனது தமிழ்ப் புலமைக்காக 'பாரதி' எனப் பட்டம் பெற்ற பாரதியார், 16 முதல் 20 வயதுவரையிலான இளம் பருவத்தை காசியில் கழித்தார். அப்போது அவர் கண்ட சுதேசிய இயக்க நடவடிக்கைகள் ஒருபுறமும், கங்கை நதிக்கரையில் மூட நம்பிக்கை செயல்கள் மறுபுறமும் அவரை புதிய இளைஞனாக மாற்றின. தமிழகத்திற்குத் திரும்பிவந்த பாரதியார் பழமைவாதக் கட்டுத்தளைகளை அறுத்தெறிந்து வீறுகொண்ட கருத்துக்களை நேர்மை உரைக்கும் நாவினால் தேசபக்திப் பாக்களைப்பாடி நாட்டின் விடுதலை உணர்ச்சியை மக்களின் நரம்பில் ஏற்றத் துவங்கினார். சுதேசமித்திரனில் துணை ஆசியராகச் சேர்ந்த அவர் 1906ல் கல்கத்தாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு 'முழுமையான சுதந்திர இந்தியா' என்ற கோஷத்தை தாரக மந்திரமாகப் பற்றிக்கொண்டார். 1907ல் சூரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கிட்டத்தட்ட நூறு இளைஞர்களை தமிழகத்திலிருந்து திரட்டிச் சென்று கலந்துகொண்டார். அங்கு தீவிரவாதப் பிரிவினர் என அழைக்கப்பட்ட சமரசமற்ற போராளிகளான திலகர், அரவிந்தர் போன்றோ ருக்கும் மிதவாதிகள் என அழைக்கப்படுவோருக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டபோது, சமரசமற்ற பிரிவினரை ஆதரித்தார். கல்கத்தாவில் 'வந்தே மாதரம்' ஆங்கில தினசரியை நடத்திவந்த விபின் சந்திர பாலரை சென்னைக்கு அழைத்து தொடர் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினார். வந்தே மாதரம் என்ற முழக்கம் சென்னையிலும் தமிழகத் திலும் தீப்பொறியென பரவியது. பின்னர் பாரதியார் தென்னகத்திலே கப்பலோட்டிய தமிழன் எனப் பெயர்பெற்ற வா.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுடன் இணைந்து தேசிய விடுதலைக் கனலை மூட்டி ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களை கதி கலங்க வைத்ததும், நிலப்பிரபுத்துவ அடிமைத் தளைகளையும் சாதிமத பிரிவினைகளையும் பெண்கள் மீதான ஒடுக்குமுறையையும் சாடியதும் நாடறிந்த வரலாறு. சமஸ்கிரத சொற்களில் சம்பிரதாய இலக்கணத்தில் செத்துக்கொண்டிருந்த தமிழுக்கு உயிர்கொடுத்து புதிய சொற்களஞ்சியத் தையும் பொருள்வளத்தையும் வழங்கி கதை கட்டுரை கவிதைகளில் புதிய நடை எளிய சந்தம் புதுக் கவிதை எனப் புதுமைகளை புகுத்தினார். பாரதி சகாப்தம் என பலராலும் குறிப்பிடப்படும் புதிய சகாப்தத்தை தமிழ் இலக்கியத்தில் அவர் உருவக்கினார். அதிகார வர்க்கத்தை எதிர்த்து பாடுபடும் உழைக்கும் மக்களுக்காக படைக்கப்படும்போதுதான் இலக் கியமும் மொழியும் செழுமையடைகிறது என்பது மக்கள்கவி எனப் போற்றப்படும் பாரதியின்மூலம் மீண்டும் நிரூபணமாகியது. அவரது பாக்களையும் வசனக்கவிதை வரிகளையும் புதிய ஆத்திச்சூடி யையும் பாப்பாப் பாட்டையும் உச்சரிக்காத உதடுகளே தமிழுலகத்தில் இல்லை எனலாம்.

எமக்குத் தொழில் புலமை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் அயராதிருத்தல் என்று கூறி, சொல்லையும் செயலையும் ஒன்றெனக்கொண்ட பாரதியின் வாழ்க்கைப் போராட்ட வரலாறு, நாட்டின் சமூக் கலாச்சார சூழ்நிலையை சீர்கெடுத்துவரும் முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து விடுதலைபெற போராடும் இன்றைய தலைமுறைக்கு சிறந்ததொரு வழிகாட்டியாகும். சாதிவாத, மொழிவெறி பிற் போக்குக் கருத்துகள் பரவிவரும் இக்காலத்தில் பாரதியாரின் புரட்சிகர கருத்துக்களைப் பரப்பும் விதத்தில் அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கமும் (AIDYO) அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கமும் (AIDSO) அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கமும் (AIMSS) இணைந்து தமிழகத்தின் பல பகுதிகளில் சுப்பிரமணிய பாரதியாரின் 92வது நினைவு தினத்தை அனுஷ்டித்தன.

### சென்னை

சென்னையில் மாவட்ட அளவில் மேற்கு மாம் பலத்தில் பாட்டாளி சிந்தனை அலுவலகத்தில் செப். 11 அன்று மாலை பாரதியார் நினைவுதினக் கூட்டம் நடைபெற்றது. பாரதியின் படைப்புகளி லிருந்து மேற்கோள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. கூட்டத்தில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளும் இளைஞர்களும் தங்கள் கருத்துக்களை முன்வைத் தனர். பாரதியாரின் சில பாடல்களும் பாடப்பட்டன. இளைஞர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் தோழர் ராஜமாணிக்கம் பேசுகையில், பெண்களைக் குறித்து பிற்போக்கான கருத்து இன்னமும் பல கவிஞர்களிடம் நிலவிவரும் வேளையில் மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம் என பெண்விடுதலைக்கு பாரதியார் முதன்முதலில் வித்திட்டதை நினைவு கூர்ந்தார். மாணவர் சங்கத்தின் மாநிலத்தலைவர் தோழர் திலகர் பேசும் போது, மக்களுக்கு எப்படிப்பட்ட கல்வியை வழங்க வேண்டும் என்பது குறித்து தேசிய கல்வி என்ற தலைப்பில் பாரதியார் எழுதிய விஷயங்களைக் குறிப்பிட்டார். இறுதியாக, இளைஞர் சங்க மாநிலத் தலைவர் தோழர் ராஜகோபால் உரையாற்றினார். வர்க்கங்களால் பிளவுண்டிருக்கும் சமுதாய இலக்கி யத்தில் பாரதியார் படைப்புகள் உயரிய ஜனநாயக மதிப்புகளையும் உழைக்கும் மக்களின் உணர்வு களையும் பிரதிபலிப்பதால் பாட்டாளிவர்க்க இலக்கியப் பொக்கிஷத்தில் இடம்பெறும் வகையாகும் என்றார். கார்ல் மார்க்ஸை புறக்கணித்த ஜெர் மனியர்களுக்கு ஹிட்லர் கிடைத்த அவலம் நமது சமுதாயத்திலும் நிகழ்ந்துவிடாமலிருக்க இத்தகைய தலைவர்களை புறக்கணிக்காது, அவர்கள் உயர்த்திப் பிடித்த கலாச்சார நெறிகளை அணையாமல் காப் பாற்றி எடுத்துச் செல்வது நமது கடமை என்றார்.

அன்று காலையில் முன்னதாக மயிலாப்பூரில் பாரதியார் நினைவு இல்லத்தில் இவ்வமைப்புக்கள் சார்பில் தோழர்கள் திலகரும், செபாஸ்டியனும் மலர் அஞ்சலி செலுத்தினர். சென்னையில் வியாசர் பாடியில் கன்னிகாபுரத்தில் செப். 14 மாலை பாரதி யார் நினைவுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. செப் 15 அன்று மாலை, பாரதி இளைஞர் நற்பணிமன்றத்தின் சார்பில் திருவள்ளுவர் நகரில் எட்டயபுரத்திலிருந்து சென்னையில் வசிக்கும் வணிகப் பெருமக்களை அழைத்து பாரதி நினைவுதினம் அனுஷ்டிக்கப் பட்டது.

### தேனி

தேனி மாவட்ட மாணவர், இளைஞர் மற்றும் மகளிர் சங்கங்கள் பாரதியார் நினைவு தினத்தை சிறப்பாக அனுஷ்டித்தனர். மக்களின் வெகுவான நிதி ஆதரவுடன் செப். 15 அன்று நூற்றுக்கும் மேற்பட்ட பாரதியார் மேற்கோள்களை வைத்து முழுநாள் கண்காட்சியை நடத்தினர். ஏராளமான மக்கள் கண்காட்சியை கண்டுகளித்தனர். மாலை யில் மாணவர் சங்க மாநிலத் துணைத்தலைவர் தோழர் ரகுரதியும் இளைஞர் சங்க மாவட்ட தலைவர் தோழர் குமாரவேலுவும் மகளிர் சங்க உறுப்பினர் தோழர் மேரியும் உரையாற்றினர். இறுதியாக மாணவர் சங்கத்தின் மாநிலச் செய லாளர் தோழர் வால்டேர் உரையாற்றினார்.

### நெய்வேலி

நெய்வேலியில் மந்தாரக் குப்பத்தில் செப் 11 அன்று இளைஞர் சங்கம் நடத்திய கூட்டத்தில் தோழர் ராஜேந்திரனும், செப் 14ல் நடத்திய மகளிர் சங்க கூட்டத்தில் தோழர் சந்திராவும் செப் டம்பர் 22ல் மாணவர் சங்கம் பாரதியின் உருவப் படத்துடன் பேரணி நடத்தி இறுதியாக தோழர் லலிதா உரையாற்றினார். பாரதியின் மேற்கோள் களும் தேசிய பாடல்களும் இக்கூட்டங்களில் இசைக்கப்பட்டன. புதுக்கோட்டையில் தோழர் கோவிந்தராஜன் இளைஞர் சங்கத்தின் சார்பில் பாரதியார் நினைவுதின விவாதக் கூட்டத்தை நடத்தினர்.




நெய்வேலியில்
பாரதியின் நினைவுதினக் கூட்டம்




தேனியில்
பாரதியாரின் மேற்கோள்களை காணும் மக்கள்

# பேரழிவை உண்டாக்கும் பென்ஷன் நிதி மசோதாவை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மிகக்கடுமையாக எதிர்க்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் செப். 5, 2013 அன்று வெளியிட்ட அறிக்கை :*

புதிய பென்ஷன் திட்டத்தின் கீழ் நிதி மேலாண்மையில் நேரடி அன்னிய முதலீட்டிற் கான வழியை திறந்துவிடக்கூடியதும் அதன்மூலம், சட்டத்தின் உதவியுடன் அந்நிய ஏகபோகங்கள் உட்பட ஊக வணிக சூதாட்டக்காரர்களையும் அனுமதித்ததின் மூலம் வாழ்வைக் காக்கும் சமூக பாதுகாப்பு திட்டத்திற்கு ஒரு பலத்த அடியை கொடுக்கக்கூடியதும் ஊகவணிக மூலதனச் சந்தையின் தறிகெட்ட போக்கிற்கு பென்ஷன் தாரர்களை ஆபத்திற்குள்ளாக்குவதுமான முந்தைய உணவு பாதுகாப்பு மற்றும் நில கையகப்படுத்தல் மசோதாவைப்போலவே கடந்த செப்டம்பர் 4ம் தேதி அதிரடி பிரேரணைமூலம் நிறைவேற்றப் பட்ட அராஜகத்தனமான பென்ஷன் நிதி மற்றும் ஒழுங்குமுறை வளர்ச்சி ஆணைய மசோதா 2011ஐ நாங்கள் மிகக்கடுமையாக எதிர்க்கிறோம்.

மூலதனச்சந்தையானது சரிந்தாலோ அல்லது உருக்குலைந்தாலோ உத்திரவாதமளிக்கப்பட்ட நிலையான நாகரீக திரும்பல்களின் உத்தரவாதம் இருக்கட்டும், பென்ஷன்தாரர்களுடைய முதலீடு அதாவது பென்ஷன் நிதியில் சேமிப்பை தற்போது அவர்கள் இழக்கும் அபாயம் ஏற்பட் டுள்ளது. யுஎஸ்ஸில் ஏற்பட்ட சப்–பிரைம் நெருக்கடியின் திடீர் வெளிப்பாட்டின் தொடர்ச்சி யாக உலகமுழுவதும் ஏற்பட்ட நிதி சந்தையின் சமீபத்திய வீழ்ச்சியானது பகாசுர பென்ஷன் நிதி நிறுவனங்களை ஒரே இரவில் திவாலாக்கிவிட்ட தானது இதற்கு கண்முன்னே நிலவும் சாட்சிய மாகும். அரசாங்கமும் கூட கொடிய சட்ட திருத்தங்களின் மூலம் சமூக பாதுகாப்பு எனும் பென்ஷன்தாரர்களுக்கான ஒரு நியாயமான தொடர்ச்சியான பணவரவை உத்திரவாதப் படுத்துவது மட்டுமல்ல, ஈன்ற பென்ஷன்தாரர் களின் பாடுபட்டு சேமித்த பணத்தை பென்ஷன் நிதியில் முதலீடு செய்யப்பட்டவை பாதுகாக்கும் தனது பொறுப்பையும் தட்டிக்கழித்துவிட்டது.

எனவே, தங்கள் வாழ்வு மற்றும் வாழ் வாதாரத்தைக் கீழிறக்கும் இந்த அபாய தாக்குதலை ஏற்கவேண்டாமெனவும் பென்ஷன் நிதியில் பாடுபட்டு ஈன்ற அவர்களுடைய சேமிப்பை பறிக்கும் உள்நோக்கங்கொண்ட இந்த அராஜக மசோதாவை உடனடியாக திரும்பப்பெறவும் கோரிக்கைக்கு இணங்க அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க சக்திவாய்ந்த இயக்கம் கட்டுமாறும் உழைக்கும் வர்க்கம் அதேசமயம் பிறபகுதி அனைத்து உழைக்கும் மக்களையும் நாங்கள் கோருகிறோம்.

## தனிமாநில பிரிவினை...

# ஆளும் முதலாளித்துவ வர்க்கம் மக்கள் ஒற்றுமையை சீர்குலைக்க பிரிவினைவாதத்தைத் தூண்டுகிறது

2ம் பக்கம் தொடர்ச்சி

ஜார்க்கண்ட் மாநிலத்தின் நிலைமை என்ன? தனி மாநிலமாக பிரிந்ததால் இம்மாநிலத்தின் பெருவாரியான தலித் மக்களுக்கு கிஞ்சித்தேனும் பலன் கிடைத்ததா? அல்லது நாட்டின் பிறபகுதியிலுள்ள பிறபிரிவு அடித்தட்டு மக்களின் நிலைமை போன்றே இவர்கள் வாழ்வும் மோசமாகியுள்ளதா? எதிர்பார்த்த வளர்ச்சிக்கு பதிலாக வளர்ச்சி என்ற பெயரில் ஏழை பழங்குடிமக்கள் தங்கள் சொந்த மண்ணிலிருந்து கூட்டம் கூட்டமாக அப்புறப்படுத்தப்படுகின்றனர்.

சட்டிஸ்கரின் நிலைமையும் இதுவே. பல பத்தாண்டுகளாக வளர்ச்சிப்பணிகள் ஏதுமின்றி புறக்கணிக்கப்பட்ட நிர்க்கதியான பழங்குடிகளின் வாழ்வில் புதிய மாநிலம் ஒளி சேர்க்கும் என்று கூறப்பட்டது. ஆனால் உண்மையோ எதிர்மாறாக உள்ளது. இப்புதிய மாநிலம் முன்னைவிட இப்போது அதிகமாக புறக்கணிக்கப்படுவதோடு இங்குள்ள பழங்குடியினர் முன்னைவிட தற்போது அதிகமாக அரசு பயங்கரவாதம் உள்ளிட்ட அனைத்து கொடுமைகளுக்கும் பலியாகிறார்கள். உணவில்லை உறைவிடமில்லை ஏழ்மை கோரதாண்டவமாடுகிறது. ஆரம்ப சுகாதார நிலையத்தை அடைவதற்கு மக்கள் 60–70 கிமீ தூரத்திற்கு அடர்ந்த காடுகள் வழியே கால்நடையாக நடந்து செல்கிறார்கள். ஆள்கடத்து வியாபாரம் குறிப்பாக பெண்கள் கடத்தல் வியாபாரம் இம்மாநிலங்களில் நன்கு கொழிக்கிறது. யதார்த்த நிலைமை இவ்வாறிருக்கையில் புதிய மாநிலங்களை உருவாக்குவதால் புதிய நிர்வாக கேந்திரங்கள் அதிகார மையங்கள் நீதிமன்றங்கள் புதிய தலைமைச்செயலகம் புதிய சட்டமன்றம் போன்றவற்றை நிறுவுகின்ற வகையில் அரசு கஜானாவிலிருந்து பெருந்தொகை செலவிடப்படுகிறது. முன்மொழியப்பட்டுள்ள புதிய தெலுங்கானா மாநிலத்தின் புதிய தலைநகரை கட்டுவதற்கு மூன்று லட்சம் கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த கூடுதல் நிதிச்சுமையை தாங்கப்போவது யார்? சாமானிய மக்களின் வரிப்பணத்தில்தானே மேல்மட்டத்தில் பளுவாக உள்ள நிர்வாக அமைப்பும் அடக்குமுறை போலீஸ், துணை இராணுவம் மற்றும் இதுபோன்ற அடக்குமுறை அமைப்புகளுக்கு நிதி செலவிடப்படும்? என்னென்ன ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி தனிமாநில கோரிக்கைக்கு மக்கள் ஆதரவளித்தார்களோ அந்த கனவுகள் பொய்யாகிப் போகும்போது அரசாங்கத்திற்கு எதிராக அணிதிரண்டு போராட்டங்களை நடத்தும்போது அவர்களை நசுக்குவதற்கும் போராட்டங்களை ஒடுக்குவதற்கும் அரசாங்கங்கள் ஏவிவிடப்போவது இவ்வாறு மக்கள் நிதியில் அமைக்கப்படும் இந்த அடக்குமுறை நிர்வாக அமைப்புக்களைத்தானே? தனி மாநிலம் என்ற புதிய சொர்க்க லோகத்தில் சுரண்டலின் சம்மட்டி அடிகளை கூடுதலாக அனுபவிக்கப்போவது ஏற்கனவே நைந்துபோய் எலும்பும் தோலுமாக உள்ள இதே பாட்டாளி மக்கள்தானே? பின்தங்கிய பழங்குடிகள் மற்றும் அடித்தட்டு மக்களுக்காக தனி மாநிலம் கோரும் அரசியல் வியாபாரிகள் அம்மக்கள் மீது கொண்டுள்ள உண்மையான அக்கறை என்னவென்று ஏற்கனவே துண்டாடப்பட்ட மாநிலங்களில் மக்களின் அவல நிலையிலிருந்து நன்கு விளங்குகிறது. தங்கள் சொந்த அரசியல் ஆதாயத்திற்காகவும் சுயநலத்திற்காகவும் பிரிவினைவாதிகளால் வளர்ச்சி முன்னேற்றம் போன்ற ஆசைகாட்டி மயக்கப்பட்ட பின்தங்கிய ஏழை பாட்டாளி மக்களின் உண்மையான நிலை என்ன என்பதற்கான ஒரு சில உதாரணங்களே இவையாகும்.

### தனி மாநிலங்களில் மேல்தட்டு மக்களின் தோற்றமும் அதிவேக வளர்ச்சியும்

உயர்பதவி அடைவதை மட்டுமே லட்சியமாகக்கொண்டுள்ள சுயநலமிக்க அரசியல் தலைவர்கள் அமர்வதற்கு உயர்பதவிகளின் எண்ணிக்கை இவ்வாறு புதிய மாநிலங்களை உருவாக்குவதால் அதிகரித்துள்ளது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களை தூண்டிவிட்டு பிரிவினைவாத வெறிவாத இயக்கத்தை நடத்தி அம்மக்களை படிக்கல்லாக வைத்துக்கொண்டு அமைச்சர்கள் சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு நிறுவனங்களில் லாபகரமான பதவிகளை கைப்பற்றுபவர்கள் இவர்களே.

இங்கே முக்கியமாக ஒரு விஷயத்தை கவனித்தாக வேண்டும். பெரும்பாலும் பழங்குடி மக்களையும் பின்தங்கிய வகுப்பினரையும் கொண்டு உருவாக்கப்படும் புதிய மாநிலங்களில் இந்த பழங்குடி மற்றும் பின்தங்கிய வகுப்பினரிடையேயிருந்து அதிவேகமாக ஒரு சிறிய மேல்தட்டு பிரிவு உருவாகிவிடுகிறது. இந்த மேல்தட்டைச்சேர்ந்தோர் தங்களது தலித் அல்லது பழங்குடி அடையாளத்தை ஆதாரமாக வைத்து தங்களை பின்தங்கிய தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் பாதுகாவலர்களாக காட்டிக்கொண்டு அரசியல் பெரும்புள்ளிகளாக வளர்ந்து எல்லா விதமான தவறான வழிகளையும் கடைபிடித்து பெரும் செல்வத்தை சுருட்டிக்கொண்டு செல்வந்தர்களாவதோடு முன்பிருந்ததைப்போன்றே கடுமையான வறுமையிலும் ஏழ்மையிலும் தொடர்ந்து வாழ்கின்ற தன் சொந்த இனத்து மக்களையே பணபலம் கொண்டும் அடியாள்பலம் கொண்டும் நசுக்கி ஒடுக்கி ஆள்கின்றனர். தனி மாநிலங்களைப் பிரிப்பதன் மூலம் இவ்வாறு மேல்தட்டு பிரிவினரை உருவாக்கி ஆளும்வர்க்கம் மற்றொரு பரிசு தருகிறது.

இதற்கு மிகச்சிறந்த சான்று பகர்வது ஜார்க்கண்ட் மாநிலமாகும். இம்மாநிலத்தின் முதலமைச்சர் பதவிக்கு ஒன்பது பேர் போட்டியிடுகின்றனர். மூன்று முறை அர்ஜுன் முண்டாவும் இருமுறை சிபு சோரனும் ஒரு நபர் பெரும்பான்மை கொண்ட மது கோடா ஒரு முறையும் தற்போது சிபு சோரனின் மகனான ஹேமந்த் சோரனும் மாறிமாறி ஆண்டு வருகிறார்கள். இவர்கள் அனைவருமே பெருந்தொகையை லஞ்சமாக பெற்றுக்கொண்டு கட்சி மாறுவதற்கு பெயர் போனவர்கள். லஞ்சம் பெற்றுக்கொண்டு சட்டமன்றம் பாராளுமன்றங்களில் நம்பிக்கை வாக்கெடுப்பு உள்ளிட்ட வாக்கெடுப்புகளில் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிப்பவர்கள். இதுபோன்ற தவறான வழியில் சேர்த்த சொத்துக்களின் மீது அமர்ந்திருப்பவர்கள். சிபு சோரனும் மது கோடாவும் திருட்டு கையூட்டு லஞ்சம் கொலை நிதி முறைகேடுகள் போன்ற குற்றங்களுக்காக சிறைவாசம் அனுபவித்தவர்கள். இவர்கள் அனைவருமே தாழ்த்தப்பட்ட பின்தங்கிய புறக்கணிக்கப்பட்ட பழங்குடி இனத்திலிருந்து வந்தவர்கள்தான். இதுபோன்று இவ்வினத்திலிருந்து மிகக்குறைந்த எண்ணிக்கையிலான மேல்தட்டு பிரிவினர் உருவாவதைத்தான் அதிகார பீடத்திலிருப்போர் இவ்வினங்கள் செழுமை பெற்று வளர்ச்சிப்பாதையில் செல்வதாகக்கூறி ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்ற முயல்கின்றன. இவ்வாறாக ஒரு சிலர் பெரும் செல்வந்தர்களாகின்றனர்.

மறுபுறத்திலோ முற்றிலும் கைவிடப்பட்ட பழங்குடியினர் உள்ளிட்ட ஏழை மக்களும் இதர பின்தங்கிய பிரிவினரும் பீதியுறச்செய்யும் விலைவாசி உயர்வு செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்துவதற்காக அத்தியாவசியப் பொருட்கள் பதுக்கல் கள்ளச்சந்தை புரையோடிவிட்ட லஞ்ச ஊழல் கிராமப்புற ஏழைகளும் மலைவாழ் மக்களும் தங்கள் வசிப்பிடங்களிலிருந்தும் வாழ்வாதாரங்களிலிருந்தும் வலுக்கட்டாயமாக பெரும் எண்ணிக்கையில் அப்புறப்படுத்தப்படல் பட்டினிச்சாவுகள் மென்னி முறிக்கும் வறுமை அதிகரித்துவரும் வேலையின்மை பணிநீக்கம் ஆலைமூடல் ஆட்குறைப்பு கல்வியின்மை மருத்துவ சுகாதார வசதியின்மை குறைந்தபட்சம் நல்ல குடிநீர் கூட உத்தரவாதப்படுத்தப்படாமை போன்ற அடிப்படை ஜீவாதார பிரச்சினைகளால் தொடர்ந்து அலைக்கழிக்கப்பட்டு வருகிறார்கள். சுயநலமிக்க அரசியல் தலைவர்கள் பின்தங்கிய இனத்தைச்சேர்ந்த மேல்தட்டு வர்க்கத்தினர் போலீஸ் நிர்வாகம் கடுங்குற்றவாளிகள் கான்ட்ராக்டர்கள் பில்டர்கள் சூதாடிகள் ஆகியோரடங்கிய கூட்டணிதான் எல்லா இடங்களிலும் ஆட்சிசெலுத்துகிறது.

மக்கள் கண்களிலிருந்து முதலாளித்துவமும் முதலாளித்துவ சுரண்டலும் மறைக்கப்படுகின்ற வரையில் இவ்வாறுதான் நடந்துகொண்டிருக்கும். பெரிய மாநிலங்களிலிருந்து ஏற்கனவே துண்டாடப்பட்ட சிறிய மாநிலங்களில் உள்ள பிரிவினைவாதிகள் அச்சிறிய மாநிலத்தையும் மேலும் கூறுபோடவேண்டும் என்று குரலெழுப்புகிறார்கள். நீண்டகாலமாக நிலவிவரும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாமை ஏழ்மை புறக்கணிப்பு ஆகியவற்றுக்கு எதிராக ஒன்றுபட்ட நன்கு அணிதிரட்டப்பட்ட சக்திமிக்க ஜனநாயக இயக்கங்கள் பொங்கியெழாத சூழ்நிலையும் நிலவுவது இப்பிரிவினைவாதிகள் தங்கள் குறுகிய நலனை முன்னெடுத்துச்செல்வதற்கு சாதகமாக்கியுள்ளது.

அஸ்ஸாம் மாநிலத்தை மேலும் பிரித்து தனி மாநிலமாக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. அஸ்ஸாமை துண்டுபோட்டு உருவாக்கப்பட்ட மேகாலயாவை மேலும் கூறுபோட்டு தனியாக கரோலாந்து உருவாக்கவேண்டும் என்று குரலெழுப்பப்படுகிறது. மூன்று லட்சம் நான்கு லட்சம் மட்டுமே மக்கள் தொகையுடைய காசி ஜைன்டியா போன்ற மலைப்பகுதிகள்கூட தனி மாநிலமாக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். மணிப்பூரை மேலும் பிரித்து குகிலாந்து உருவாக்கவேண்டும் என்று அங்கிருந்து குரல் வருகிறது. கோர்க்காலாந்து தோன்றுவதற்கு முன்பு லெப்சாஸ் இனமக்கள் வாழும் பகுதிக்கு தனி மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததையும் நாம் கவனிக்கவேண்டும். ஜார்க்கண்ட் ஒடிசா மேற்கு வங்கத்தை பிரித்து அகண்ட ஜார்க்கண்ட் உருவாக்கவேண்டும் என்றும் தற்போது கோரப்படுகிறது.

போலி மார்க்சிஸ்டுகளான சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) போன்ற கட்சிகள்கூட ஒப்புதல் தரும் இப்பிரிவினைகளுக்கும் இந்தியாவை கூறுபோடுதலுக்கும் முடிவு ஏதேனும் இருக்கிறதா? இந்தியாவின் ஒருமைப்பாட்டையே இப்பிரிவினைவாதம் அச்சுறுத்தவில்லையா? ஒரு காலத்தில் இத்தேசத்தின் மக்கள் அனைவரும் ஜாதி மதம் இனம் மொழி வட்டார பிரிவினைகளைக்கடந்து ஒன்றாகப்போராடி பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தை விரட்டியடித்து ஒரே தேசமாக உருவாகவில்லையா? அன்றைய காலனியாதிக்கத்தின்போது இருந்த ஒற்றுமை சுதந்திர இந்தியாவில் ஏன் மறைந்து வருகிறது? தனித்தனியாக பிரிக்கப்படும் சிறிய மாநிலங்கள் மடத்தனத்தையும் முட்டாள்தனத்தையும் மட்டுமே வளர்த்துவிட்டு கீழ்த்தட்டு ஏழை மக்களுக்கு அளவற்ற ஊறு விளைவிக்கிறது. புதிதாக உருவாக்கப்படும் மாநிலத்து மக்கள் தங்கள் சகோதரர்களான தாய் மாநில மக்களோடு கொண்டிருந்த உறவில் விரிசல் ஏற்பட்டு அவர்களுக்கிடையே ஒற்றுமை குலைகிறது. இதனால் அல்லல்படும் ஏழை மக்களின் போராட்ட சக்தி பலவீனமடைவதால் இந்த பலவீனத்தை சாதகமாக்கிக்கொண்டு ஆளும் வர்க்கம் மேலும் கடுமையாக உழைக்கும் வர்க்கத்தை சுரண்டி ஒடுக்குவதற்கு ஏதுவாகிறது. யதார்த்தம் இவ்வாறாக இருக்கையில் காலனியாதிக்கத்தின் கீழ் நிலவிய ஒற்றுமை சுதந்திர இந்தியாவில் இல்லாமற்போய் தனது இனத்திற்கும் மொழிக்கும் ஜாதிக்கும் அடையாளம் காணும் போக்கு ஏற்படுகிறதே! இதைக்காட்டிலும் பெரிய விந்தை வேறு ஏதேனும் இருக்குமா? புதிய மாநிலங்களை உருவாக்குவதுதான் சர்வரோக நிவாரணியெனில் ஏற்கனவே புதிதாக உருவாக்கப்பட்ட மாநிலங்களில் மக்கள் வாழ்வு தாங்கொணா சுமையாவது ஏன்?

எனவே அதிகரித்துவரும் மக்களின் துன்பங்கள் துயரங்களுக்கான மூல காரணத்தை கண்டறிந்தாலொழிய மாநிலங்களை பிரித்து புதிய மாநிலங்களை உருவாக்கவேண்டும் என்ற கோரிக்கையும் அவற்றை மேலும் கூறுபோடவேண்டும் என்ற கோரிக்கையும் எழுவது முடிவின்றி செல்லும். சுதந்திரத்திற்கு பின்பு இதுதான் நடந்துகொண்டிருக்கிறது.

அன்றைய ஒன்றுபட்ட மதராஸ் மாகாணத்தை பிரித்து ராயலசீமா மற்றும் கடலோர ஆந்திரத்தின் 11 மாவட்டங்களைக் கொண்டு தனி ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. பின்பு நிஜாம் ஆட்சிபுரிந்த ஐதராபாத் உள்ளிட்ட பகுதிகளை அதோடு இணைத்து விசால ஆந்திரா உருவாக்கப்பட்டது. இவ்வாறு பல பகுதிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட ஆந்திர மாநிலத்தை இன்று பிரித்து தனித் தெலுங்கானா அமைக்கவேண்டும் என்று கோரப்படுகிறது. இதேபோல் முன்பு பம்பாய் மாகாணத்தை பிரித்து உருவாக்கப்பட்ட மகாராஷ்டிர மாநிலத்தை பிரித்து தனியாக விதர்பா மாநிலம் அமைக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. இவ்வாறு

தொடர்ச்சி 11ம் பக்கம்

## புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் போராட்டங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வர்க்க வெகுஜன அமைப்புகள் அகில இந்திய அளவில் நடைபெறும் போராட்டங்களின் ஒரு பகுதியாகவும் இம்மாவட்டத்தின் ஆவுடையார்கோவில் தாலுகா பகுதி மக்களின் பல தரப்பு பிரிவினரின் கோரிக்கைகளை வலியுறுத்தியும் பல போராட்டங்களை நடத்திவருகின்றன. சமீபத்தில் முறைசாரா நலவாரியங்களின் 'விலைவாசிக்கேற்ப ஊதிய உயர்வு', 'வங்கிக் கணக்கை முதலில் சேரும் போதே கட்டாயப்படுத்தக்கூடாது, 'நலவாரிய கூட்டங்களில் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதி' போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுதும் **30–07–2013** அன்று நடைபெற்ற அனைத்து தொழிற்சங்க கூட்டுப் போராட்டத்தில் ஆல் இந்தியா யுனைடெட் ட்ரேட் யூனியன் சென்டர் (AIUTUC) சார்பில் தோழர்கள் அ.கோவிந்தராஜ், பி. நடராஜன் ஆகியோர் தலைமையில் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் (AIKKMS) மணமேல்குடி வட்டாரக்கமிட்டி சார்பில் மீமிசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட் நிர்வாக சீர்கேடுகளை எதிர்த்து பாதிக்கப்பட்ட விவசாயிகளைத் திரட்டி கிராம விவசாயிகள் கோரிக்கைகளை முன்வைத்து மத்திய, மாநில அரசாங்கத்தின் கவன ஈர்ப்பு பிரச்சார போராட்டம் நடத்தினர். மாநில அரசாங்கம் அறிவித்த வறட்சி நிவாரணம் ஏக்கருக்கு ரூ.5000 வழங்குவதில் இலஞ்ச முறைகேடுகளை தட்டிக் கேட்டு முறையீடு செய்யப்பட்டது. வீட்டு உபயோகத்திற்காக கிராம விவசாய மக்கள் பயன் படுத்தும் மின்சாரத்தின் கட்டணத்தை கடுமையாக உயர்த்தயிருப்பதை எதிர்த்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மகஜர் அனுப்பப் பட்டது.

மீமிசல் அரசு உயர்நிலைப் பள்ளியில் இலவசக் கல்வி வழங்குவதாக சொல்லப்படுகிறது. ஆனால் மாணவர்களிடம் மதிப்பெண் சான்றிதழ் வாங்க கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனை எதிர்த்து தமிழ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கோரி அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கமும் (AIDSO) அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கமும் (AIDYO) இணைந்து பிரச்சாரம் மேற்கொண்டன. இவ்வனைத்து போராட்டங்களுக்கும் மக்களின் ஆதரவும் பங்கெடுப்பும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது குறிப்பிடத்தகுந்ததாகும்.

## ஏஐடிஎஸ்ஓவின் 8வது அகில இந்திய மாணவர் மாநாட்டையொட்டி தமிழகத்தில் சென்னை, மதுரை, நெய்வேலியில் நடைபெற்ற மாணவர் மாநாடுகள்








**ஆகஸ்ட் 2, 20, 2013ல் மதுரை மற்றும் சென்னையில் நடைபெற்ற ஏஐடிஎஸ்ஓவின் மாவட்ட மாநாடுகளில் தோழர்கள் வி என் ராஜசேகர், எம் என் ஸ்ரீராம் உரையாற்றுகிறார்கள்.**




**தில்லியில் மாணவி மீதான பாலியல் தாக்குதல் வழக்கு சம்பந்தமாக 18 வயதுக்குக் கீழே உள்ளோர் ஈடுபடும் பாலியல் குற்றச் சட்டத்தை திருத்தம் செய்யக்கோரி செப்டம்பர் 4, 2013 ஏஐஎம்எஸ்எஸ், ஏஐடிஓய்ஓ, ஏஐடிஎஸ்ஓ இணைந்து மதுரையில் நடத்திய ஆர்ப்பாட்டம்**

# தனிமாநில பிரிவினை...

10ம் பக்கம் தொடர்ச்சி

தெலுங்கானா விதர்பா மாநிலங்கள் தனியாக உருவாக்கப்பட்டாலும் அம்மாநிலங்களையும் உட்கூறுபோட்டு மேலும் சிறிய மாநிலங்கள் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை எதிர்காலத்தில் எழுந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் இப்போது உருவாக்கப்படும் மாநிலங்களிலும் மக்களின் கஷ்டங்கள் குறையப்போவதில்லை.

### முதலாளித்துவத்தை பாதுகாக்கும் குற்றம்

அனைத்து கேடுகளுக்கும் ஆணிவேரான முதலாளித்துவத்தையும் அதன் நச்சு அரசு இயந்திரங்களையும் பாதுகாப்பது எத்தகைய கிரிமினல்தனம் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இவ்விஷயத்திலும்கூட கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்ளும் சி.பி.ஐ. சி.பி.ஐ.(எம்) கட்சியினர் சொல்லிலும் செயலிலும் முதலாளித்துவ கட்சிகளைப்போன்றே பேசியும் செயல்பட்டும் வருவதோடு இவ்வளவையும் செய்துவிட்டு முதலாளித்துவ ஊடகத்தின் தாராளமான ஆதரவோடு இடதுசாரி என்ற பெயரையும் இழக்காமல் வைத்துக்கொண்டுள்ளனர். தேசிய கட்சிகள் பிராந்திய கட்சிகள் என அனைத்து பிரதான முதலாளித்துவ கட்சிகளும் எந்தப்பிரச்சினையாயினும் ஒன்றின் மீது மற்றொன்று குற்றச்சாட்டுகளை சரமாரியாக பொழிகின்றன. தேர்தல் நோக்கத்திற்காக அன்றி வேறு எந்தக்காரணங்களுக்காகவும் இவை புதிதாக தனி மாநிலங்களை கோருவதில்லையாயினும் இவ்விஷயத்திலும் இவ்வாறுதான் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டிக்கொள்கின்றனர்.

ஆனால் இக்கட்சிகள் எவையும் உண்மையை மக்கள் முன்பு விண்டுரைப்பதில்லை. மக்கள் விரோத கொள்கைகள் நடவடிக்கைகள் ஒவ்வொன்றின் பின்னாலும் உள்ள முதலாளித்துவ சூழ்ச்சி அம்பலமாகாமல் பாதுகாப்பதில் இக்கட்சிகள் அனைத்தும் கவனமாகவும் வஞ்சகத்தோடும் செயல்படுகின்றன. ஏனெனில் இவர்களுக்கு பிழைப்பு ஓடுவதே எல்லா வழிகளிலும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவை செய்வதன் மூலம்தான். ஒவ்வொரு கணமும் மக்கள் நலனுக்காக உதட்டளவில் பேசும் அவர்கள் கூட்டு சேர்ந்திருப்பது ஆளும் வர்க்கத்தோடு தானேயன்றி மக்களோடு அல்ல. பிரிவினைவாதத்தை ஆதரிப்போரும் இதே வகையை சேர்ந்தவர்கள் தான். சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) கட்சிகளும் இதே வழியில் தான் செல்கின்றன. ஏனெனில் தேர்தலெனும் கரும்பூதத்தை எதிர்கொள்வதற்கு அவர்களும் அவர்களின் கூட்டாளிகளும் ஆளும் முதலாளித்துவத்திற்கு வால்பிடிக்கிறார்கள். சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) கட்சியினரும் அவர்களின் கூட்டாளிகளும் சட்டமன்றங்கள் பாராளுமன்றத்தில் கணிசமான உறுப்பினர்களை கொண்டுள்ளனர். நாடெங்கிலும் பிரிவினைவாதத்தை தூண்டிவிடுவதற்காக ஆளும் முதலாளித்துவமே பொறுப்பு என்று ஆளும் வர்க்கத்தை கண்டித்து அவர்கள் எப்போதாவது ஒரு வார்த்தையாவது கூறியதுண்டா? அவர்களின் பாசாங்கு விமர்சனங்களும் மென்மையான கண்டனங்களும் அன்பான வார்த்தைகளாகவே வடிவெடுத்துள்ளன. அரசியலெனும் ஆடுகளத்தில் வெற்றிகரமாக ஆடுவதற்கும் தேர்தல் அரங்கில் ஆதாயம் தேடுவதற்காகவும் செய்யப்படும் வெற்று வேட்டுக்களே இந்த விமர்சனங்களும் கண்டனங்களுமாகும். ஆளும் வர்க்கத்தின் வர்க்கநலனை பாதுகாக்கும் செவிலித்தாய்களாக இப்போலி இடதுசாரிகள் விளங்குகின்றனர்.

### ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கத்தை வளர்த்தெடுப்பதன் மூலம் பிரிவினைவாதத்தை முறியடிப்பீர்

சமரசம் செய்துகொள்ளும் இச்சக்திகள் அனைத்தையும் தனிமைப்படுத்தவேண்டும். அதோடு கூடவே வாழ்வின் அனைத்து தரப்பிலும் தொடர்ந்து அதிகரித்து வரும் தாக்குதல்களுக்கு எதிராக பொங்கியெழும் மக்களின் கோபத்தையும் எதிர்ப்பையும் திசை திருப்பிவிடும் முதலாளித்துவத்தின் சூழ்ச்சியை முறியடிப்பதற்காக கோணலான சிந்தனையையும் பிரிவினைவாத மனப்பான்மைகளையும் விட்டொழித்து பலதரப்பட்ட உழைக்கும் மக்கள் ஒன்றிணையவேண்டியதும் மிகவும் அவசியமாகும். இல்லையேல் வாழ்வின் கடுமையான பிரச்சினைகளுக்கு எதிராக ஒன்றுபட்ட சக்திவாய்ந்த நீடித்து நிலைக்கக்கூடிய ஜனநாயக இயக்கங்களை நாடுதழுவிய அளவில் வளர்த்தெடுப்பது மிகவும் சிரமமான காரியமாகிவிடும். இத்தகைய இயக்கம் மட்டும்தான் கொடுங்கோன்மை முதலாளித்துவ ஆட்சியின் அதிகரித்துவரும் தாக்குதல்களிலிருந்து பாடுபடும் உழைக்கும் மக்கள் சிறிதளவேனும் நிவாரணம் பெற இயலும். பிரிவினைவாதம் எனும் போதை குருட்டுத்தனத்திற்குத்தான் இட்டுச் செல்லும். இதனால் மக்கள் தங்களுக்குள் தேவையற்ற சண்டையிட்டுக்கொண்டிருக்க இச்சண்டையை மூட்டிவிடும் ஆளும்வர்க்கமோ தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொண்டு தனது சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் மேலும் உக்கிரமாக நடத்திக் கொண்டிருக்கும்.

எனவே மாநிலங்களை பிரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் உள்நோக்கம் கொண்ட முயற்சிகளை செயலிழக்கச்செய்வதற்காக நாட்டின் மூலை முடுக்கெங்கிலும் ஜனநாயக இயக்கங்களை உக்கிரப்படுத்தவேண்டியது அவசியமான கடமையாகும். அனைவரும் தங்களது கட்டுத்தளைகளிலிருந்து விடுபட்டு தவறான பாதையில் செல்வதற்கு செய்யப்படும் அனைத்துத் தூண்டுதல்களையும் மறுத்துப் புறந்தள்ளிவிட்டு உண்மையான இடதுசாரி ஜனநாயக இயக்கத்தின் நீரோட்டத்தோடு தங்களை ஒவ்வொருவரும் இணைத்துக்கொள்ளவேண்டும். வரலாறு நம்மீது சுமத்தியுள்ள இக்கடமையை பூர்த்தி செய்யவேண்டும். எமது கட்சியான எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்) செல்லும் போராட்டப்பாதை இதுவே. எல்லா தடங்கல்களையும் வெற்றிகரமாக கடந்து சென்று எமது பலமனைத்தையும் ஒருங்கே குவித்து நாடுமுழுவதும் நீண்ட நெடிய நீடித்து நிலைக்கக் கூடிய சக்திவாய்ந்த இடதுசாரி ஜனநாயக மக்கள் இயக்கங்களை எமது கட்சி கட்டிவருகிறது.

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 24th October 2013

பாட்டாளி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

# கொடூரக்கொலை மற்றும் இனஅழிப்பை நடத்தியதற்காக நரேந்திரமோடி உடனடியாக ராஜினாமா செய்யவும், பொது விசாரணை நடத்தி கடுமையான தண்டனை வழங்கவும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கோருகிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் செப்.8 2013 அன்று வெளியிட்ட அறிக்கை :*

தொடர் போலி என்கவுன்டர்களை வடிவமைத்த குற்றத்தின்பேரில் சுமார் 7 ஆண்டுகளாக ஐ.பி.எஸ். அதிகாரி D.G. வன்ஸாரா சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் புயலைக் கிளப்பிய தனது ராஜினாமாக் கடிதத்தில், தனது முஸ்லீம் விரோத 2002 படுகொலையில் குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி 2002ல் சிறுபான்மையினருக்கு எதிரான மிக மோசமான இனப்படுகொலையை நடத்தியதில் நேரடியாக ஈடுபட்டிருந்தது குறித்தும் தனது எதிரிகளையும் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்பாவி சிறுபான்மை பிரமுகம் சிலரையும் தீர்த்துக்கட்டுவதற்காக அவரால் நேரடியாக வடிவமைக்கப்பட்ட போலி என்கவுன்டர் குறித்தும் ஐ.பி.எஸ். அதிகாரிகளான ஆர்.பி. ஸ்ரீகுமார் மற்றும் சஞ்சீவ்பட் ஆகியோர் முன்பு வெளியிட்ட திடுக்கிடவைக்கும் உண்மைகளை வெளியிட்டு உறுதிப்படுத்தினார். ஆதாரங்களாகின்றன. எவ்வித மனசாட்சி உறுத்தலுமின்றி அப்பாவி மக்களை கொன்றுகுவித்த வகுப்புவாதத்தின் அச்சாகவிளங்கும், அவராலும் அவருடைய அரசாங்கத்தாலும் அதே சமயம் அவருடைய வழிகாட்டிகளான சங்பரிவார் குறிப்பாக ஆர்.எஸ்.எஸ்ஸாலும் வடிவமைக்கப்பட்ட இப்படுகொலையை இன்றும்கூட நியாயப்படுத்தும் ஆணவத்தை வெளிப்படுத்தும் மோடியைப்போன்ற ஒருநபரை ஆளும்வர்க்கத்தின் செல்வாக்குமிக்க ஒரு பிரிவினரால் அடுத்த பிரதமமந்திரிக்கான வேட்பாளராக முன்னிலைப்படுத்துவது கடும் கண்டனத்திற்குரியதாகும்.

மனிதஇனத்திற்கெதிராக அவர்புரிந்த பயங்கர குற்றத்தின் முதல் தகவலின்படி, தார்மீக அடிப்படையில் உடனடியாக அவர் பதவியைவிட்டு இறங்கவேண்டும், பொது விசாரணையை எதிர்கொள்ளவேண்டும், கொடூர கொலைகாரருக்குரிய மிகக் கடுமையான தண்டனையை அவருக்கு வழங்க ஏற்கவேண்டும் என நாங்கள் மிக வலிமையாக கோருகிறோம்.

இக்கோரிக்கைக்கு ஆதரவளிக்கவும் ஒரு கிரிமினல் குற்றவாளியை, கொலைகாரரை நாட்டு மக்களின் பிரதம மந்திரியாக முன்னிலைப்படுத்தும் ஆளும் முதலாளிவர்க்கத்தின் சதியை முறியடிக்க சக்திவாய்ந்த இயக்கத்தை கட்டுமாறும் பொது மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

# உணவு பாதுகாப்பு மசோதா ஒரு அப்பட்டமான ஏமாற்று என்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கடுமையாக விமர்சிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஆகஸ்ட் 27, 2013 அன்று வெளியிட்ட அறிக்கை :*

மிகுந்த பரபரப்பிற்கிடையில் அவசர அவசரமாக நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேசிய உணவு பாதுகாப்பு மசோதா, மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை வழங்குவதற்காக தேவையான போதிய அளவு உணவை மக்கள் வாங்கத்தக்க குறைந்த விலையில் வழங்குவதாக வாய்நிறைய உறுதியையும், பலவற்றையும் மூடிமறைத்து செய்யப்பட்ட மேலோட்டமான பாவனைகளையெல்லாம் கொண்டிருப்பினும் கூட அதையெல்லாம் மீறி இது ஒரு அப்பட்டமான ஏமாற்று மசோதா என்பதை நாங்கள் ஆழ்ந்த கவலையுடன் நோக்குகிறோம்.

தாங்கள் எழுப்புகின்ற எந்தக் கோரிக்கைகளுக்காகவும் பாராளுமன்றத்திற்கு வெளியில் சக்திவாய்ந்த இயக்கங்களை அணிதிரட்ட எந்த ஒரு முயற்சியும் செய்யாமல், அன்றாடம் தலைப்புச் செய்திகளில் இடம்பிடிப்பதன் மூலம் தங்களது கட்சிக்கு வெறுமனே ஒரு அரசியல் பிரச்சார ஆதாயத்தைத் தேடிக்கொள்வதற்காக முதலில் தெலுங்குதேசமும் பின்பு பிஜேபியும் நீண்ட நாட்களாக பாராளுமன்ற நடவடிக்கைகளை முடக்கியதன் காரணமாக பட்டினிகிடக்கும் ஏழை மற்றும் அடித்தட்டு மக்கள் உட்பட பல கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட இம்மாதிரியான ஒரு மிக முக்கியப் பிரச்சினை குறித்து அவையில் எந்த ஒரு பொருள் பொதிந்த விவாதமும் நடைபெறவில்லை என்ற விஷயமும் கூட மிகவும் ஆழ்ந்த கவலைக்குரியதாகும்.

இந்த மசோதா, அடித்தட்டு மக்களுக்கு ஊழலற்ற சரியான விநியோக முறை மூலமாக வாங்கத்தக்க குறைந்த விலையில் போதுமான அளவு உணவுதானியங்கள் இருப்பை உறுதிப்படுத்துவதுபோன்ற மிகமுக்கியமான பிரச்சினைகள் குறித்து தீர்வு காணத் தவறிவிட்டது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முதலில் இந்த மசோதாவில் குறிப்பிடப்படும் உரிமை அடிப்படையிலான அணுகுமுறையும் கூட தவறாக பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது, 'உணவு பெறும் உரிமை' என்பது சட்டரீதியில் அமலாக்கத்திற்கு உள்ளாக்கப்பட கூடியதோ அல்லது நியாயத்தன்மை கொண்டதோ அல்ல என்று குறிப்பிடுகிறது. இரண்டாவதாக, நபருக்கு இவ்வளவு என்று ஒதுக்கப்படும் அளவும் கூட மிகக் குறைவானதாகும். சராசரியாக குறைந்தபட்ச வேலைகளைச் செய்து உயிரோடு ஜீவிக்க குறைந்தபட்சம் மாதத்திற்கு 15 கிலோ என்பது தேவைப்படும் அளவாக இருக்க, இவர்கள் வழங்க முன்மொழிந்திருக்கும் மாதம் நபருக்கு 5 கிலோ என்பது தேவையைவிட மிகக் குறைந்த அளவாகும். இவ்வாறு ஒதுக்கப்பட்ட தேவையான அளவை விட குறைவான அளவு தானியத்தை மட்டுமே வழங்கும் இந்தப்பிரச்சினை மிக தந்திரமாக காங்கிரஸின் வெற்றுமுழக்கங்களால் மூடிமறைக்கப்பட்டுவிட்டது. ஏனெனில், காங்கிரஸ் தலைமையிலான ஆளும் கூட்டணியின் நோக்கம் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதல்ல மாறாக வருகின்ற தேர்தலில் தங்களுக்கான வாய்ப்புகளை பிரகாசப்படுத்திக்கொள்ள கொடுக்கப்படும் பரிசுதான் இது. மூன்றாவதாக, இந்த மசோதா ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கின்ற பல கோடி இந்திய மக்கள் குறைந்த வயதில் அகால மரணத்தை எந்த சலனமுமின்றி தழுவிக் கொண்டிருக்கும் மிக முக்கியத்துவம் கொண்ட பிரச்சினை குறித்து எந்த அக்கறையுணர்வையும் கொண்டிருக்கவில்லை. நான்காவதாக, ஒதுக்கப்பட்ட உணவு தானியத்தின் அளவு எவ்வளவு குறைவானதாக இருந்தபோதிலும் அந்த அளவு உணவு தானிய விநியோகத்தையேனும் உத்திரவாதப்படுத்துவதற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீட்டை இம்மசோதா உறுதிசெய்யவில்லை.

மேலும் இந்த மசோதா, கொள்முதலிலும், விநியோக நடைமுறையிலும் மேலும் மேலும் தனியார்மயத்தை நோக்கிச் செல்வதைச் சுட்டிக்காட்டுகிறதே தவிர அதைப்புறக்கணிக்கவில்லை. மேலும் இது, தற்போது இருந்துவரும் பொது விநியோகத் திட்டத்தை கிட்டத்தட்ட செயல்படவிடாமல் முடக்கி வைத்திருக்கும் நிர்வாகம்–போலீஸ்–இரக்கமற்ற வியாபாரிகள்–இடைத்தரகர்கள்–கள்ளச்சந்தைக்காரர்கள்–ஆளும் வர்க்கத்தின் செல்வாக்குப் பெற்றவர்கள் என அனைவராலும் சுற்றிச் சூழப்பட்ட முழுக்க முழுக்க ஊழல்மயப்பட்ட வலைப்பின்னலிலிருந்து அதனை மீட்பது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. அளவுக்கதிகமாக ஆரவாரப்படுத்தப்படும் ஆதார் அட்டையின் மூலம் நேரடியாகப் பணம் வழங்கும் திட்டத்திலும் கூட சரியான போதிய விநியோக வழிமுறை தயாரான நிலையில் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்க, இந்தத்திட்டத்திலும் கூட அதனை சீர்குலைக்கும் நடவடிக்கைகளான முறைகேடுகள், தில்லுமுல்லுகள் நுழைந்து இடைத்தரகர்களின் தலையீடு மற்றும் பிற மேசமான நிர்வாகச் செயல்பாடு எல்லாவிதத்திலும் வருவதற்கு இடமுண்டு.

ஆகவே, 'வாழ்வீர்! கண்ணிமான வாழ்க்கை' என்று அரசாங்கம் பிரகடனப்படுத்துவது போல மக்கள் வாழ இம்மசோதாவழிவகுக்காது. மாறாக பிறர் கருணையிலும் அருளாசியிலும் இலவச சலுகைகளையும் சார்ந்து வாழும் மிக மோசமான கண்ணியமற்ற வாழ்க்கைக்கு மக்களைக் கீழிறக்கிவிடும். நாம் மேற்குறிப்பிட்ட ஊழல் 'வலைப்பின்னல்' கூட்டணியின் செல்வாக்குமிகுந்த மேலாதிக்கத்தின் காரணமாக அப்பாவி மக்களுக்கு அனைத்து வாய்ப்புகளும் மறுக்கப்படும். ஒரு நல்ல வேலைவாய்ப்பின் மூலம் போதுமான வாங்கும் சக்தியை பெற்று அதன் மூலம் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வாய்ப்பும் கூட இதன் மூலம் வெளித்தெரியாத வகையில் குழிதோண்டிப் புதைக்கப்படும். மொத்தத்தில் இந்த மசோதா முழுவதுமே மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதி என்பது மட்டுமல்ல, ஏமாற்றி ஓட்டுப்பறிக்கும் பொறியாகும்.

இத்தருணத்தில் அரசாங்கத்தின் கடமை என்பது, நல்ல வருவாய் ஈட்டும் நிரந்தரமான வேலை வாய்ப்பை மக்களுக்கு வழங்கி அவர்கள் போதுமான வாங்கும் சக்தியைப்பெறுவதற்கு வழிசெய்வதுதான். அதன் மூலம் அவர்கள் இம்மாதிரியான சலுகைகளையும் இலவசங்களையும் சார்ந்திராமல் நாகரீகமான, ஆரோக்கியமான சராசரி வாழ்க்கை வாழமுடியும். இதில் மிகவும் முக்கியமானதென்னவெனில், மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்ற உணவு தானியம் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களில் ஒட்டுமொத்த அரசு பொது விநியோக முறையை அறிமுகப்படுத்தி ஊழலற்ற இடைத்தரகர்களற்ற சுதந்திரமான விநியோக வழிமுறைகளைக் கொண்டு ஒவ்வொரு குடிமகனுக்கும் வாங்கத்தக்க குறைந்த விலையில் தரமான உணவுப் பொருட்களை வழங்குவதுதான். இவ்வாறாக, அரசாங்கம் நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவளிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஆகவே நாங்கள், இந்த மசோதா திரும்பப் பெறப்பட வேண்டுமென்றும் எவ்விதத் தந்திரங்கள், போதாமைகள், வெற்றுவார்த்தைகள் அகியவற்றிலிருந்து விடுபட்ட மற்றும் நீக்கப்பட வேண்டியவைகள், உரிய முக்கியத்துவத்துடன் சேர்க்கப்படவேண்டிய அனைத்து நியாயமான கோரிக்கைகள் மற்றும் சரியான திறன்பெற்ற, நடைமுறைக்கேற்ற விநியோக வழிமுறைகள் மூலம் தரமான, போதுமான அளவு உணவு தானிய வளங்களை உறுதிப்படுத்துதல் ஆகியவைகளைக் கொண்ட புதிய மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனக் கோருகிறோம்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in